வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 25.06.2022 சனிக்கிழமை | இதழ் : 201 | பக்கங்கள் : 16

# மனிதாபிமான அவசரநிலையை எதிர்கொண்டுள்ளது இலங்கை!

## ஐ.நா. அமைப்பு எச்சரிக்கை

OCHA
United Nations Office for the Coordination of Humanitarian Affairs

நியூயோர்க், ஜூன். 25

**இலங்கை முழுமையான மனிதாபிமான அவசரநிலையை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விடயங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் (OCHA) தெரிவித்துள்ளது.**

இலங்கையில் தற்போது 200 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகள் கையிருப்பில் இல்லை என்றும், அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் மேலும் 163 மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

2,700 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய அறுவைச் சிகிச்சை மற்றும் 250 இற்கும் மேற்பட்ட 15

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரானார் தம்மிக

கொழும்பு, ஜூன் 25

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக பெரேரா நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் 15

## மாணவிகள் துஷ்பிரயோகம்: ஆசிரியருக்கு விளக்கமறியல்!

முல்லைத்தீவு, ஜூன். 25

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றின் மாணவிகள் பலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரும் மாணவர் ஒருவரும் எதிர் 15

## ரணிலின் நியமனத்தின் பின்பே நிலைமை மோசமடைந்தது!

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 25

ஜனாதிபதி, அரசாங்கம் மீது குறிப்பாக பிரதமர் மீது பொதுமக்களின் கோபமும் வெறுப்பும் அதிகரித்துள்ளது என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நியமனத்தின் பின்னர் மக்களின் பிரச்னைகள் மோசமடைந்துள்ளதாகவும், அதற்கான தீர்வு எங்கும் காணப்படவில்லை.

ராஜபக்ஷக்களை பாதுகாப்பதிலும் எதிர்ப்பாளர்களை ஒடுக்குவதிலும் கவனம் செலுத்தும் அதேவேளை, பிரதமரின் நியமனம் நாட்டின் 15

## ரயிலில் நேற்று யாழ்.வந்த நீதி அமைச்சர் விஜயதாஸ

யாழ்ப்பாணம், ஜூன். 25

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்த அமைச்சருக்கு வரவேற்களிக்கப்பட்டது.

இந்து பௌத்த கலாசாரப் பேரவையில் இரண்டாம் மொழிக் கற்கை 15

## நிபந்தனைகளுடன் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் ஆதரவு!

கொழும்பு, ஜூன். 25

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இடையி 15

## கிளிநொச்சியில் ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு

கிளிநொச்சி, ஜூன். 25

கிளிநொச்சியில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்குவது தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 15

## ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இலங்கையை கைவிடமாட்டா!

### அந்த நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதிமொழி



கொழும்பு, ஜூன். 25

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை இலங்கையின் நண்பர்கள் என கருதுமாறும் கடினமான சந்தர்ப்பத்தில் இலங்கையை கைவிடாது தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதாகவும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளி 15

## நாட்டின் பொருளாதார நிலைமை உறுதியான பின்பே புதிய தேர்தல்

### பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 25

அரசாங்கம் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே புதிய தேர்தலை நடத்த முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முதலில் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதன் பின்னரே தேர்தலை நடத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விசேட அறிக்கையை வெளியிட்டு பிரதமர் இதனை தெரிவித்தார்.

மேலும் மிக முக்கியமான பிரச்னைகளுக்குத் தீர்வு 15

## வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் மருத்துவர்களின் சம்பளம் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 25

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்போது வைத்தியர்கள் பணியாற்றி வரும் நிலையில், வடக்கு மாகாணத்தில் அவர்களுக்கான சம்பளம் குறைக்கப்பட்டு முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கதிரமலை உமாசுதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்வேறு நெருக்கடிகள் தற்போது நாட்டில் காணப்பட்டாலும்கூட அதை எதிர்கொண்டு வைத்தியர்கள் தங்களால் இயன்றவரை பணியாற்றி வருகின்றனர்.

நாம் பல்வேறு கோரிக்கைகளை உயர் அதிகாரிகளுக்கு முன்வைத்தபோதும் அதனைக் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இது, கேள்வி - பதில் எழுதுகின்ற பகுதி அல்ல. ஊர்க்குருவியின் கருத்துக்கள் தொடர்பாக முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு பதில் எழுதிக்கொண்டே இருப்பதெனில் அது கேள்வி - பதில் பகுதிபோல மாறிவிடும்.

சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் கனடாவில் வாழும் நடராஜா முரளிதரன் என்ற சுவிஸ் முரளி தனது முகநூலில் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கப்போய், அவர் அதற்கு பதில் எழுதியிருக்கிறார். அது அவரது உரிமைதான். அதற்காக இந்த ஊர்க்குருவி யார் என்பதற்கு அவர் கிளிச் சோதிடம் பார்த்து சொல்வது போல சொல்லியிருக்கிறார். 'ஈழநாடு' குழுமத் தலைவர் குகநாதன் ஊர்க்குருவி என்ற பெயரில் எழுதுவதாக அவர் ஊகித்துக்கொண்டு பதில் எழுதியிருக்கிறார்.

அதுகுறித்து இனி குகநாதன் தனது சட்டத்தரணி ஊடாக அவருக்கு கடிதம் எழுதுகின்றாரோ தெரியவில்லை. அது நமக்கு வேண்டாத வேலை.

இனி இந்தப் பத்தியில் எழுத வந்த விடயத்திற்கு வருவோம்.

தந்தை செல்வநாயகம் உயிரோடு இருந்தபோது ஒரு தடவை சொன்னதாக ஈழநாடுவில் அப்போது படித்த ஞாபகம்.

தமிழ் மக்களுக்கு பிரச்னைகள் உண்டு. அது தீர்க்கப்படவேண்டும். அதற்காகவே நாங்கள் பல தசாப்தங்களாக போராடிக்கொண்டிருக்கின்றோம். எமது போராட்டம் எனது காலத்தில் வெற்றியடைந்துவிடும் என்று நான் சொல்லப்போவதில்லை. அது எனக்குப்பிறகு அமிர்தலிங்கம் தலைமையில் முன்னெடுக்கப்படும். அவர் காலத்திலும் அந்தப் போராட்டம் வெற்றியடையாமல் போகலாம். அப்போது அமிர்தலிங்கம் தனக்கு அடுத்த சந்ததியிடமும் இந்தப் பிரச்னையை பிரச்னையாக கையளித்து செல்லவேண்டும். அப்படி கையளிக்கவில்லை என்றால் அதற்கு அடுத்த சந்ததி அதனைக் கைவிட்டு விட்டால் இந்த நாட்டில் தமிழ் இனம் வாழ்ந்தது என்பதற்கான அடையாளமே இல்லாமலும் போய்விடலாம்.

இதுதான் தந்தை செல்வா சொன்னதாக வந்த செய்தி.

இன்றைக்கு பாராளுமன்றத்தில் உள்ள எமது எம்.பி.க்கள் பலர் பழைய சங்கதிகளையும் எமக்கு இருக்கும் பிரச்னைகளையும் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது இதற்காகத்தானோ என்றும் இந்த ஊர்க்குருவி அவ்வப்போது நினைப்பதுண்டு. ஆனால், அவர்கள் பாராளுமன்றம் போய் என்ன செய்தார்கள் என்று சிலர் கேள்வி எழுப்புவதுண்டு. நாட்டில் எத்தனையோ பிரச்னைகள் இருக்கும்போது பாராளுமன்றத்தில் இவைபற்றி பேசுவது வேண்டாத வேலை என்றும் அவர்கள் நினைக்கின்றார்கள்.

இலங்கையில் தமிழ் மக்கள்மீது நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கின்றனர். பல பிரதேச சபைகள் ஏன், நமது மாகாணசபையும்தான் தீர்மானம் நிறைவேற்றியது.

ஆனால், இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று நிரூபிக்க எம்மிடம் போதிய சான்றுகள் இல்லை. எனவே, அப்படி நாம் கூறமுடியாது என்று வாதிட்டவர்களும் நம்மத்தியில் உண்டு. அதுவும் நமது தலைவர்களாக.

அறுபது வருடங்களுக்கும் அதிகமான கால இன முரண்பாடுகளின் பின்னர், சர்வதேச மேற்பார்வையில் அமைதி வழியில் அடுத்த இருபத்தியேழாம் ஆண்டில் 'போகன்விலே' (Bougainville) எனும் புதிய நாடொன்று உருவாக இருக்கிறது. அதுவும், அவுஸ்திரேலியாவிற்கு அருகில் சுமார் ஆயிரத்து ஐநூறு கிலோமீட்டர் தொலைவில், ஒரு புதிய நாடு உருவாக இருக்கிறது.

கடந்த வார ஐ.நா பொதுச்சபை தீர்மானத்தின்படி 'போகன்விலே' சர்வஜன வாக்கெடுப்பு சர்வதேச மேற்பார்வையில் நடந்து முடிந்ததுடன், நீண்டகால சமாதான முன்னெடுப்பின் முடிவில், பப்புவா நியூகினியின் தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள போகன்விலே மக்கள், பொது வாக்கெடுப்பின் முடிவுகளின்படி, தாம் சுதந்திரமாக வாழ விரும்பியுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அந்த மக்கள் தமக்கு எதிராக நடாத்தப்பட்ட இனஅழிப்புக்கு எதிராக தொடர்ந்து போராடி வந்ததால், இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்க இருக்கின்றார்கள்.

அங்கும் ஒரு தலைவர் தோன்றி, நமக்கு நடந்தது இனப்படுகொலை அல்ல என்று வாதிட்டிருந்தால், அவர்களின் தலையெழுத்தும் மாறியிருக்கலாம்.

ஆக, ஒவ்வொருவருக்கும் அவரவர் கொள்கைள்மீது நம்பிக்கை இருக்கும். அவர்கள் அதற்காக குரல்கொடுப்பதை கேள்விக்குட்படுத்த வேண்டியதில்லை என்று கருதுகிறது இந்த ஊர்க்குருவி.

டக்ளஸ் தேவானந்தாவும் தனது வழியில் தமிழ் மக்களுக்கு எதையாவது செய்யவேண்டும் என்றுதானே நினைக்கின்றார்.

ஆக, எமக்கு நடந்த பழைய சங்கதிகளை பேசிக்கொண்டிருப்பதால் என்ன பயன் என்றும், தெற்கில் சிங்கள மக்களுடன் சேர்ந்துதான் நமது பிரச்னைக்கு தீர்வுகாண முடியும் என்றும் சிலர் வாதிடுகின்றனர்.

தமிழ் மக்களின் இனவிடுதலைப் போராட்டத்தில், அந்த போராட்டத்திலுள்ள நியாயங்களை ஆதரித்தவர்கள், அதற்காக குரல் கொடுத்தவர்களில் தெற்கில் உள்ள இடதுசரிகளும் முக்கியமானவர்கள். ஆனால், அவர்கள் கூட இன்று எங்கே இருக்கின்றார்கள் என்பது இரகசியமல்ல.

அதுமட்டுமன்றி, நமது தலைவர்கள் நாட்டின் பொதுப்பிரச்னைகளுக்காகவும் குரல் கொடுக்கவேண்டும் என்கின்றார்கள் சிலர்.

உண்மைதான், இன்று நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி நமக்கும்தான். நாமும் குரல் கொடுக்கத்தான் வேண்டும். ஆனால், இந்த பொருளாதார நெருக்கடிக்கு நல்லாட்சி அரசில் நடந்த மத்திய வங்கிக் கொள்ளையும்தானே பங்களித்தது. அப்போது இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் நமது கூட்டமைப்பின் தலைவர்தானே. அவர் அல்லது அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்துடன் இருந்தவர்கள் எத்தகைய எதிர்வினையை ஆற்றினார்கள்?

அப்போது செய்யவில்லை என்பதற்காக, இப்போதும் செய்யக்கூடாதா என்று கேட்பதும் நியாயமானதுதான். நிச்சயம் செய்யத்தான் வேண்டும். அதில் எங்கள் சுய விருப்பு வெறுப்புக்கள் இருக்கக்கூடாது என்பதும் முக்கியமானதல்லவா?

**- ஊர்க்குருவி**

# திருக்கேதீச்சரம் செல்லும் மக்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்க

## இந்து மாமன்றம் பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வரலாற்று பிரசித்தி பெற்றதும் இலங்கையில் பாடல் பெற்ற தலமுமான திருக்கேதீஸ்வரம் ஆலய மகா கும்பாபிஷேகத்தை ஒட்டி எதிர்வரும் 4 முதல் 6ஆம் திகதி வரை விசேட போக்குவரத்து வசதிகளை செய்து தருமாறு பிரதமர், போக்குவரத்து துறை அமைச்சரிடம் இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்து மாமன்றத்தின் உப தலைவரும், திருக்கேதீச்சர திருப்பணி சபையின் உப தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தின் விடயத்துடன், ஆறு. திருமுருகன் விடுத்த விசேட அறிக்கையில்,

சைவ சமய ஆலய அறங்காவலர்கள், சைவ சமய நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் அடியவர்கள் திரளாகச் சென்று வழிபாடு செய்ய வேண்டிய முக்கிய நாள் எதிர்வரும் 04.07.2022 முதல் 06.07.2022வரை.

எனவே, இந்தத் திருநாளில் இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் சைவ மக்கள் மன்னார் திருக்கேதீச்சரம் செல்லவேண்டி இருப்பதனால் பிரதம மந்திரியும் போக்குவரத்து துறை அமைச்சரும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளை செய்ய முன்வரவேண்டும்.

தனிப்பட்ட ரீதியில் மக்கள் செல்வதற்கு எரிபொருள் பற்றாக்குறை பெரும் பாதிப்பாக இருப்பதால் சைவமக்கள் பல வருடங்களாக காத்திருந்த திருக்கேதீச் சர ஆலய மகா கும்பாபிஷேகத்தை தரிசிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இலங்கை இந்திய அரசின் ஒப்பந்தத்தின் கீழ் இந்திய அரசால் சுமார் 350மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவு செய்து முற்றாக கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள ஆலயத்தை கண்ணால் கண்டு தரிசிப்ப தற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பலர் ஆவலாக காத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் இருந்து பலாலியை நோக்கி வரவுள்ள விமான சேவை குறிப்பாக திருக்கேதீச்சர ஆலயத்தை அடிப்படையாக வைத்து ஜூலை முதல்வாரம் ஆரம்பிக்கப்படவிருப்பது அனைவரும் அறிந்ததே. எனவே, இந்த விடயம் தொடர்பாக பிரதமரும் போக்குவரத்து அமைச்சரும் தமிழ் அரசியல்வாதிகளும் மிகுந்த அக்கறையோடு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)



# எரிபொருள் பெற முனைந்த ஓட்டோவை மோதியது பேருந்து

## ஒருவர் படுகாயம்

வடமராட்சி, ஜூன் 25

எரிபொருள் பெறுவதற்காக முச்சக்கரவண்டியை வரிசையில் நிறுத்த முயன்றவரை சுற்றுலா சென்ற பேருந்து மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இயக்கச்சி எரிபொருள் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது. இதில், வடமராட்சி ஆழியவளையை சேர்ந்த 39 வயதான நபரே காயமடைந்தார்.

காயமடைந்த நபர், முச்சக்கர வண்டிக்கு எரிபொருளைப் பெறுவதற்காக வடமராட்சி ஆழியவளையிலிருந்து, இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்று தனது முச்சக்கர வண்டியை வரிசையில் நிறுத்த முயன்றுள்ளார்.

அந்தச் சமயம், யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி சுற்றுலா பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து முச்சக்கர வண்டியை மோதியது. இதில், முச்சக்கரவண்டி சாரதி படுகாயங்களுக்கு உள்ளானார்.

உடனடியாக பளை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த விபத்துக் குறித்து பளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-2)

# அங்குரார்ப்பண நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடத்தில் கல்வியாண்டு 2022 ஃ 2023 காலப்பகுதியில் சைவ சித்தாந்த முதுகலைமாணி கற்கைநெறியை மேற்கொள்ளவுள்ள 7 ஆம் அணி மாணவர்களுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா கொள்ளவுள்ளார். அத்துடன், உயர்பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன் மற்றும் தகைசார் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், பேரவை உறுப்பினர்கள், இணைப்பாளர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கற்கைநெறிக்காக 49 மாணவர்கள் பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 3 ஆயிரம் வெதுப்பகங்கள் இதுவரை மூடப்பட்டுள்ளன!

கொழும்பு, ஜூன் 25

வெதுப்பக உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலை 300வீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளன என்று அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் 50 கிலோகிராம் கோதுமை மா பொதி ஒன்றின் விலை ஆயிரம் ரூபாயால் அதிகரித்துள்ளதாகவும், தற்போது ஒரு கோதுமை மா பொதி 14,000 ரூபாய்க்கு விற்கப்படுவதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை கிட்டத்தட்ட 3,000 பேக்கரிகள் மூடப்பட்டுவிட்டன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

டீசல் மற்றும் பெற்றோல் தட்டுப்பாடுகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு அமைச்சர் காஞ்சன விஜயசேகரவிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
25.06.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றனர்?

தமிழ் மக்கள் பொருளாதார சுமையால் கடுமையாக பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபோது, மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்னும் கேள்வி எழுகின்றது. பாராளுமன்றம் கூடுகின்றபோது, கூடுவதும், பின்னர் பாராளுமன்றம் கலைகின்றபோது, கலைவதற்கும் அப்பால், நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்மையிலேயே என்ன செய்கின்றனர்? பாராளுமன்ற பேச்சுக்களில்கூட அவர்கள் எந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனரோ, அந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேக பிரச்னைகள் தொடர்பில் எவரும் பேசுவதாகத் தெரியவில்லை.

ரணில் தொடர்பிலும், கோட்டாபய தொடர்பிலும்தான் அதிகம் பேசுகின்றனரே தவிர, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதை காணமுடியவில்லை. தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும், தங்களைத் தெரிவு செய்த, குறிப்பிட்ட மாவட்டங்களை சேர்ந்த மக்களின் குரலாகவும் இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் எவருமே பேசுவதில்லை. கிழக்கு மாகாணத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

இதில் சாணக்கியன் ஒருவரின் குரலை அடிக்கடி கேட்க முடிகின்றது. ஆனால், அவர் மட்டக்களப்பு மக்களின் பிரத்தியேக பிரச்னைகள் தொடர்பில் பேசியதாக சான்றில்லை. அவரின் பேச்சுக்கள் பொதுவானவையாகவே இருக்கின்றன. அதிகம் 'நான் இருக்கின்றேன்' - என்பதை காண்பிக்கும் நோக்கிலேயே இருக்கின்றது. திருகோணமலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர், அவர்களுக்கு பிரச்னையிருக்கின்றது என்பதையே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மறந்துவிட்டனரா - என்று கேட்குமளவுக்கே நிலைமைகள் இருக்கின்றன.


திருகோணமலையை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர், இரா. சம்பந்தன் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக, தனது சொந்த மாவட்டத்துக்கு செல்லவில்லை. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ் பிரதிநிதி இல்லாமலேயே அனைத்து முடிவுகளும் எடுகப்படுகின்றன. அம்பாறையில் ஒரு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கிறார் எனச் சொல்லப் பட்டது. ஆனால், அவர் என்ன செய்கின்றார் என்பது தொடர்பில் தகவல்களில்லை. உண்மையில் கிழக்கு மாகாண கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகக் குறைந்தது மாதம் ஒரு முறையாவது கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் கூடி ஆராய வேண்டும். அதே போன்றுதான், வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களும் செயலாற்ற வேண்டும். பொருளாதார பிரச்னையால் தமிழ் மக்கள் எவ்வாறான நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக, ஏற்கனவே மூன்று தசாப்தகால யுத்தத்தால் உருக்குலைந்து போன தமிழ் மக்கள் - குறிப்பாக எல்லைப்புற கிராமங்களில் வாழும் மக்கள் எவ்வாறான பிரச்னைகளை எதிர்கொண்டுவருகின்றனர், அவர்களுக்கு உதவிகள் போய் சேர்கின்றனவா? இவ்வாறான கேள்விகளுடன் பிரச்னைகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்ந்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள், தூதரகங்கள் ஆகியவற்றை அணுகி பிரச்னைகளை தீர்க்க முயற்சிக்க வேண்டும். ஆனால், இப்படியான அணுகுமுறையுடன் எந்தவொரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் செயல்பட்டதாக சான்றில்லை. பாராளுமன்றம் செல்வது, அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுவதுடன் தங்களின் கடமைகள் முடிந்துவிட்டன என்றே கருதுகின்றனர்.

தமிழ் தேசிய அரசியலிலுள்ள பிரதான பிரச்னை. பாராளுமன்ற உறுப்பினர்களை வழிடந்துவதற்கான எந்தவொரு கட்டமைப்பும் இல்லை. ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக வந்தவுடன், அவர் ஒரு தனிக்கட்சியாகவே செயல்படுகின்றார். இதனால் ஒவ்வொருவரும், தங்களுக்கு சரியென்பதையே பேசுகின்றனர் - செய்கின்றனர். ஏன் இப்படி பேசுகின்றீர்கள் என்று கேட்பதற்கு ஆளில்லை. தமிழ் அரசு கட்சியின் தலைவருக்கு கட்சியில் என்ன நடைபெறுகின்றதென்பதே தெரியாத நிலைமை. இதன் காரணமாகவே பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பற்ற வகையிலும், தான்தோன்றித்தனமாகவும் நடந்து கொள்கின்றனர்.

இலங்கையின் பொறுப்பு கூறல் தொடர்பில் பேசுகின்றவர்கள், மறுபுறம் தங்களுக்கு வாக்களித்தவர்களுக்கு பொறுப்புச் சொல்லக் கூடியவர்களாக இல்லை. உண்மையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் முதன்மையான பணி - அவர், தனக்கு வாக்களித்த மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடியவராக இருக்க வேண்டும். அதாவது, தனக்கு வாக்களித்த குறித்த மாவட்டத்தின் மக்கள். அதற்கு பின்னர்தான் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஒருவர் சிந்திக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பற்ற செயல்பாடுகளுக்கு, தமிழ் மக்களிடமுள்ள குறைபாடுகளும் ஒரு பிரதான காரணமாகும். மக்கள் அவர்களை தட்டிக் கேட்பதில்லை.

# அமெரிக்க நிபுணரின் காலமறிந்த கோரிக்கை!

அலசுவது இராஜதந்திரி



அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹன்க் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மோசமான ஆட்சியே முக்கிய காரணம் என்று தெரிவித்து அவரை உடனடியாகவே பதவியிலிருந்து விலகுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரநிலை பற்றி முழு உலகுமே நன்கறிந்துள்ளது. அத்துடன், இந்தப் பாதகமான நிலைக்கு மூலகாரணம் ராஜபக்ஷ குடும்பமே என்பதையும் அனைவரும் அறிவர். இருந்தபோதிலும் இலங்கையின் வங்குரோத்து நிலையை ஓர் அங்கீகாரமாக உறுதிப்படுத்துவதாகவே அமெரிக்க நிபுணர் ஸ்டீவ் ஹன்க் குறிப்பிட்டிருப்பது விளங்குகின்றது.

அமெரிக்க ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழக பொருளாதார நிபுணரான ஸ்டீவ் ஹன்க், இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலம் முதல் சகல நிலைமைகளையும் மிக உன்னிப்பாக கவனித்து வருபவராக இருந்து வருகின்றார். அத்துடன், அவர் வெளியிட்டுள்ள தரவுகள் இலங்கை எவ்வளவு தூரம் பொருளாதாரப் பின்டைவை சந்தித்துள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுவனவாக இருக்கின்றன.

அவரின் தரவுகள் இலங்கையின் பணவீக்கம் 130.14 சதவீதமாக இருப்பதாகவும் கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலங்கை ரூபாயின் பெறுமதி 50 சதவீதமாக குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றன.

கண்மூடித்தனமான முறையில் கோட்டாபய ராஜபக்ஷ அரசு உரப் பாவனை மற்றும் உணவு, எரிபொருள் என்பவை தொடர்பாக கையாண்ட நடவடிக்கைகளே இலங்கையை பொருளாதார ரீதியாக அதல பாதாளத்தில் தள்ளி விட்டுள்ளதாகவும் ஸ்டீவ் ஹன்க் தெரிவித்துள்ளார்.

கடன்களை பெருமளவில் பெறுவது ஒருபுறமிருக்க அந்தக் கடன்களை இலங்கை எவ்வாறு மீளச்செலுத்த போகிறது என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது. இந்தியாவே இலங்கைக்கு அதிகளவில் கடன்களை வழங்கியுள்ள நாடாக இருக்கின்றது. எனவே இலங்கை இந்தியாவிடமிருந்து பெற்ற கடனை மீளச்செலுத்த முடியுமா என்பது கூட முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

ஒரு காலகட்டத்தில் இன்றைய சிங்கப்பூர், மலேசியா ஆகியவற்றின் பொருளதார நிலையைவிட இலங்கையின் பொருளாதாரம் மிக மேம்பட்டதாக இருந்தது. இதனை காலஞ்சென்ற சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ கூட ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்திப் போக்கைக்கொண்டதாகவே இருந்தது. ஆனால், தவறான பொருளாதார திட்டங்கள் என்று குறிப்பிடுவதைவிட இன்றைய ஆட்சியில் இருப்போர் கண்மூடித்தனமாக தமது சொந்த நலன்களை பாதுகாக்கும் விதத்தில் பொருளாதார திட்டங்களை வகுத்துக் கொண்டதே இன்றைய நெருக்கடி நிலைக்கு முக்கிய காரணமாகும். நாட்டு நலனைப்பற்றி சிந்திப்பதைவிட தமது சொந்த நலன்களைப் பற்றியும் தாம் சார்ந்தவர்களின் நலன்களைப் பற்றியும் சிந்தித்தமை காரணமாகவே இன்று நாடு பலத்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்திய கடன் உதவித் திட்டத்தைப் பொறுத்தவரை இந்த மாதம் பதினைந்தாம் திகதியோடு இந்தியாவின் இலங்கைக்கான கடன் உதவித்திட்டம் நிறைவடைகின்றது. இதனையடுத்து மீளவும் பலத்த நெருக்கடி நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுவிடுமோ ? என்ற கேள்வியே எழுந்துள்ளது.

மேற்கத்தேய நாடுகள் ஒரு வங்குரோத்து நிலையை அடைந்த நாட்டுக்கு, தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில், பொருளாதார நிலவரத்தை பொறுத்தவரை இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் வெளிநாடுகளை தங்கி வாழ்கின்ற நிலையிலேயே இருந்து வந்துள்ளது. பண்டங்களாகவும், நிதி உதவிகளாகவும் இலங்கை வெளிநாட்டு ஒத்துழைப்பையே பெரிதும் நம்பியிருந்தது.


இலங்கையின் பொருளாதாரம் எழுபதுகளின் நடுப்பகுதியில் திறந்த பொருளாதார நடவடிக்கைகள் அறிமுகமான போது வளர்ச்சிப்பாதையை எட்டியதாக அமைந்திருந்தது.

ஆனால், வடக்கு - கிழக்கு யுத்தம் மூன்று தசாப்த காலமாக ஏற்படுத்திய தாக்கமும் அதன்பின்னர் இலங்கை சுனாமி போன்ற இயற்கை அனர்த்தமும் அதனைத் தொடர்ந்து முழு உலகையுமே ஆட்டிப்படைத்த கோவிட் நோய்ப் பிரச்னை என்பவை இலங்கையின் பொருளாதாரத்துக்கு அடிமேல் அடிவிழ வைத்திருந்தது.

ஆனால், தற்சமயம் இலங்கையின் பொருளாதாரம் ஓர் ஊழல்மிக்க குடுப்பத்தின் கையில் சிக்கி அவஸ்த்தைக்கு உள்ளாகியிருக்கின்றது என்பதே பொருளாதார நிபுணர்களின் அவதானிப்பாக இருக்கின்றது.

இந்த அவஸ்தையில் இருந்து இலங்கை எவ்வாறு, எத்தகைய கோணத்தில் மீண்டு வரும் என்பதற்கு காலம்தான் பதில் கூற வேண்டும்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நினைத்ததை செயல்களை நண்பர்களின் ஆதரவுடன் நிறைவேற்றுவீர்கள். நிதி நிலை உயரும். நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும் மகிழ்ச்சியுடன் செயல்படுவீர்கள்.

**இடபம்**
அலைச்சல் அதிகரிக்கும் என்றாலும் எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டு. வெளியூர் பயணம் லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவு உண்டாகும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த இடத்திலிருந்து வருமானம் வந்து சேரும். நிதி நிலை சீராகும். பிரச்னை விலகும். லாபகமான நாள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும்.

**கடகம்**
எதிர்பார்த்த பணம் வந்து சேரும். புதிய தொழில் தொடங்க முயற்சிப்பீர்கள். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தடைபட்டிருந்த செயல் நடந்தேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டு.

**சிம்மம்**
உங்கள் செயல் கடைசி நேரத்தில் இழுபறியாகும். நிதானம் தேவை. உங்கள் திறமை வெளிப்படும் நாள். தொழிலில் விவேகமாக செயல்பட்டு லாபமடைவீர்கள். நினைத்தவற்றை சாதித்து மகிழ்வீர்கள்.

**கன்னி**
நீங்கள் விரும்பாத செயல் நடக்க வாய்ப்புண்டு. விழிப்புணர்வு தேவை. கவனமும் நிதானமும் தேவைப்படும் நாள். மனதில் குழப்பம் அதிகரிக்கும். உங்கள் விருப்பம் நிறைவேறாமல் தள்ளிப்போகும்.

**துலாம்**
புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களின் துணையுடன் முயற்சிக்கும் செயலில் வெற்றி உண்டாகும். திட்டமிட்ட முயற்சி சாதகமாகும்.

**விருட்சிகம்**
எதிரிகளின் தொல்லை விலகும். உங்கள் முயற்சி வெற்றியாகும். உங்கள் செல்வாக்கு உயரும். நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். அனுசரித்துச் சென்று ஆதாயம் காண்பீர்கள்.

**தனுசு**
உங்கள் முயற்சி எதிர்மறையாகும். எதிர்பார்த்த ஒன்று நிறைவேறாமல் போகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்**
யோசித்து செயல்பட வேண்டிய நாள். அறிமுகம் இல்லாதவர்களுடன் எந்தவொரு செயலிலும் ஈடுபட வேண்டாம். மனதை அலைபாய விடாதீர்கள். செயலில் விழிப்புடன் செயல்பட்டுவீர்கள்.

**கும்பம்**
உங்கள் எண்ணப்படி செயல்பட்டுவீர்கள். தடையை தாண்டி முன்னேறும் நாள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. துணிச்சலுடன் செயல்பட்டு சாதிப்பீர்கள்.

**மீனம்**
புதிய முதலீடுகள் தொழிலில் இன்று வேண்டாம். பண விஷயத்தில் கவனம் தேவை. குடும்பத்தினர் வழியில் எதிர்பாராத செலவு ஏற்படும். குழப்பம் அதிகரிக்கும். ஒருசிலர் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள்.

# பழனிசாமி - ராகுல் காந்தி இரகசிய உடன்படிக்கை?

## தமிழக அரசியலில் பரபரப்பு





சென்னை, ஜூன் 25

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், அ.தி.மு.கவின் இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமியுடன் பேசினார் என்று, வெளியான தகவல் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அ.தி.மு.க.வில் ஒற்றை தலைமை விவகாரத்துக்கு நீதிமன்றம் வாயிலாக பன்னீர் செல்வம் தற்காலிக முற்றுப் புள்ளி வைத்துள்ளார். ஒற்றை தலைமை தீர்மானத்தை பொதுக்குழுவில் நிறைவேற்ற முடியாமல் போனதை தனக்கு ஏற்பட்ட தோல்வியாக பழனிசாமி கருதுகிறார். பன்னீர் செல்வத்துக்கு பா. ஜ. க. மேலிடம் உதவுகிறதோ என்ற சந்தேகம், பழனிசாமி தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில், பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, பழங்குடியின வகுப்பை சேர்ந்த திரௌபதி முர்முவை வேட்பாளராக அறிவித்துள்ளது. எதிர்க்கட்சிகள் முன்னாள் எம்.பி., யஸ்வந்த் சின்காவை வேட்பாளராக அறிவித்துள்ளன.

சமூக நீதி பேசும் தி.மு.க., பழங்குடியின வேட்பாளரை ஆதரிக்குமா அல்லது உயர் வகுப்பு வேட்பாளரை ஆதரிக்குமா என, இணையவாசிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர். இதனால் என்ன முடிவெடுப்பது எனத் தெரியாமல் தி.மு.க. தவித்து வருகிறது.

பா. ஜ. க. வேட்பாளரை தி.மு.க., ஆதரித்தால் அ. தி. மு. க., பக்கம் செல்ல காங்கிரஸ் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், அ. தி. மு. க., இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமியுடன் பேசினாரென, தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக இரு தரப்பிலும், அதிகாரபூர்வமாக எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

அ. தி. மு. க.,வுக்கு கடந்த சட்டசபை தேர்தலில் தேர்தல் வியூகம் கொடுத்தவர் உதவியுடன், ராகுல் பேசினாரெனக் கூறப்படுகிறது. அப்போது எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளருக்கு, ராகுல் ஆதரவு கோரினாரெனவும் பா. ஜ. கவை நம்ப வேண்டாம் என கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. பா.ஜ. க. வேட்பாளரை ஆதரிக்காமல், பழனிசாமி எதிர்க்கட்சிகளின் வேட்பாளரை ஆதரிக்க முடிவு செய்தால், அரசியல் கூட்டணி மாறும்.

இதை உளவுத்துறை வழியே அறிந்த, பா. ஜ. க தலைமை அதிர்ச்சியடைந்துள்ளது. அதைத் தொடர்ந்து பா. ஜ. க. நிர்வாகிகள், நேற்றுமுன்தினம் பழனிசாமி, பன்னீர்செல்வம் ஆகியோரைச் சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொண்டனர். பழனிசாமி என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பதே, தற்போது தமிழக அரசியல் வட்டாரத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. (ஐ)

# தீர்மானங்கள் இரத்து; வழக்கு தொடர முடிவு

## பன்னீர்செல்வம் அணி



சென்னை, ஜூன் 25

அ. தி. மு. க. பொதுக்குழுவில் 23 தீர்மானங்கள் இரத்து செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என்று ஓ. பன்னீர்செல்வத்தின் கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளருமான ஆர். வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள பன்னீர் செல்வத்தின் வீட்டில் வைத்து அவர் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அ. தி. மு. க. பொதுக் குழுவில் 23 தீர்மானங்களை மட்டுமே நிறைவேற்ற வேண்டும் என்றுதான் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், இந்தக் கூட்டத்தில் 23 தீர்மானங்களையும் இரத்து செய்துவிட்டனர். அவற்றை இரத்து செய்ய இவர்களுக்கு உரிமை இல்லை. அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்பு செய்திருக்கிறோம்.

கூட்டத்தில் அவைத் தலைவரை தேர்ந்தெடுத்ததும் செல்லாது. அ. தி. மு. க. அவைத் தலைவர் என்பவர் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதற்கு முன்பு கட்சியின் தலைமை பொறுப்பில் இருந்த எம். ஜி. ஆர், ஜெயலலிதா ஆகியோர்தான் அறிவித்தனர். அதுதான் நடைமுறை. இதன்படி, ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர்தான் அவைத் தலைவரை அறிவிக்க வேண்டும்.

23 தீர்மானங்களை இரத்து செய்யும்போது, அந்த பொதுக்குழு உறுப்பினர்களும் இரத்தாகிவிட்டார்கள். அதன் பிறகு எப்படி அவைத் தலைவரை தேர்ந்தெடுத்தீர்கள். பதவி வெறி அவர்களது அறிவை மயக்கிவிட்டது. சட்டத்தை மறந்து, நீதிபதிகளின் உத்தரவை மறந்து, அவர்கள் நடத்திய நாடகம் சர்வாதிகாரத்தின் உச்சிக்கே சென்றுவிட்டது. அதை மக்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் - என்றார். (ஐ)

# விஜகாந்தின் உடல்நலம் குறித்து கேட்டறிந்தார் இந்திய பிரதமர்!



சென்னை, ஜூன் 25

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் விஜயகாந்த், உடல் நலம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி வாயிலாக விசாரித்துள்ளார்.

தே. மு. தி. க. கட்சியின் நிறுவுநர் தலைவர் விஜயகாந்த், கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நலக் குறைவால் தீவிர அரசியலில் ஈடுபட முடியாமல் விலகி இருக்கிறார். இந்நிலையில் அவரின் விரல்கள் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், விஜயகாந்தின் உடல்நலம் தொடர்பாக அவரது மனைவி பிரேமலதாவிடம் தொலைபேசி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று நலம் விசாரித்தார். அப்போது விஜயகாந்துக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தவர், விரைவில் அவர் குணமடையவும் பிரதமர் மோடி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

ஏற்கெனவே முதல்வர் ஸ்டாலின் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், விஜயகாந்த் நலம்பெற வாழ்த்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசியல்வாதிகளின் சுமையும் நாட்டு மக்களின் தலைகளில்!

## சஜித் பிரேமதாஸ விசனம்

கொழும்பு, ஜுன் 25

**மக்கள் தங்கள் சொந்த சுமைகளையும், நாட்டை அழிக்கும் அரசியல்வாதிகளின் சுமைகள் என இரு சுமைகளையும் சுமக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மக்களின் துன்பங்களை புரிந்து கொள்ளாத அரசாங்கம் மக்களின் உயிருடன் விளையாடிக் கொண்டிருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஆட்சியை நடத்தும் நபர்களுக்கு மக்கள் படும் துன்பங்கள் குறித்து எந்தப் பொறுப்பும் அற்றவர்கள் போலவே செயற் படுகின்றனர் எனவும் கூறினார்.



ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 98 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திடமிருந்து மக்கள் தீர்வுகளை எதிர்பார்க்கிறார்களேயன்றி, தீர்க்க முடியாத குறைகளை அல்ல எனவும், இருந்தபோதிலும், இரண்டு வருட ஆட்சியின் கீழ் மக்கள் அரசியல் நாடகங்களை மட்டுமே மரபுரிமையாக பெற்றுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

நாட்டின் இரு முனைகளிலும் எரியும்தீபம் போல இரண்டு யுத்தங்கள் நடந்த நாட்டையே பொறுப்பேற்ற ரணசிங்க பிரேமதாஸ , அத்தகைய காலத்திலும் இயலாமை, முடியாமை பற்றி பேசாமல் செயற்பட்டதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)



# தமிழகத்திலிருந்து 2ஆம் கட்ட உதவி கப்பல் நேற்று கொழும்புக்கு வந்தது

கொழும்பு, ஜுன் 25

தமிழகத்திலிருந்து இலங்கை மக்களுக்காக அனுப்பப்பட்ட சுமார் 3 பில்லியன் ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகள் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளன.

இந்திய தூதரகம் தமது உத்தியோகபூர்வ டுவிட்டரில் இதனைத் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட குறித்த கப்பல் நேற்று கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலை வரவேற்கும் நிகழ்வில் இந்திய தூதுவர் கோபால் பாக்லே, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள், மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

### சிகரெட் விற்பனை அளவு 5 வீதத்தினால் உயர்ந்தது

கொழும்பு, ஜுன் 25

முடிவடைந்த காலாண்டில் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிகரெட்டின் விற்பனை அளவு 5 வீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை புகையிலை நிறுவனத்தின் அண்மைய நிதி அறிக்கையின்படி மார்ச் 31, 2022 இல் முடிவடைந்த காலாண்டில் ரூ. 37 பில்லியன் விற்பனையில் அரசாங்க வரிகளாக 27.84 பில்லியன் மற்றும் ரூ. 2.58 பில்லியன் வருமான வரி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வருட காலாண்டில் நிறுவனத்தின் வரிக்குப் பிந்தைய லாபம் ரூ. 4.18 பில்லியன் எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# அடுத்த வாரம் தொடக்கம் யாழில் பங்கீட்டு அட்டைக்கு எரிபொருள்

யாழ்ப்பாணம், ஜுன் 25

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் வாரத்திலிருந்து பங்கீட்டு அடிப்படையில் எரிபொருளை விநியோகிப்பதற்காக அமுல்படுத்தப்படவுள்ள பொது மக்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

அரச திணைக்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் பங்கீட்டு அட்டை அந்தந்த திணைக்களத் தலைவர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இந்த எரிபொருளுக்கான பங்கீட்டு விநியோக அட்டையை பெற்றுக்கொள்ளாத அரச திணைக்களங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவுறுத்தியுள்ளார். (அ)



# எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் தனிநபர்!

கிளிநொச்சி, ஜுன் 25

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருக்கும் மக்களிற்கு தனிநபர் ஒருவர் குடிதண்ணீர் வழங்கி வருகிறார்.

கிளிநொச்சி நகரில் கொழுத்தும் வெயிலில் நீண்ட வரிசையில் காத்திருப்போரின் தாகம் தீர்க்க இவர் எடுத்துள்ள பணியை மக்கள் பாராட்டி வருகின்றனர். (அ)

# வடமராட்சி தனியார் பஸ் சங்கத்தினரின் பணி புறக்கணிப்புப் போராட்டம் நிறைவு

யாழ்ப்பாணம், ஜுன் 25

வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

நேற்றுக் காலை ஆறு மணியிலிருந்து சேவையில் ஈடுபடாமல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட வடமராட்சி தனியார் பஸ் சேவைச் சங்கத்தினரின் போராட்டம் இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளரின் உறுதிமொழியின் அடிப்படையில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பஸ் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கும் இலங்கை போக்குவரத்துச் சாலைகளில் டீசல் நிரப்பும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் பருத்தித்துறை சாலை முகாமையாளரின் தன்னிச்சையான நடவடிக்கைகளைக் கண்டித்து நேற்று தனியார் பஸ் சேவைச் சங்கத்தினரால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆ.சிறி, பருத்தித்துறை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி, வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் இ.போ.ச. வடபிராந்திய பிராந்திய சாலை முகாமையாளரை அழைத்து அவருடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் 750 வழித் தடத்தில் நாளாந்தம் சேவையில் ஈடுபடும் 25 போக்கு வரத்து வாகனங்களுக்கும் நாளாந்தம் 750 லீற்றர் டீசல் வழங்குவதாக உறுதி மொழி அளிக்கப்பட்டது.

இதனை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டு தனியார் 750 வழித்தட போக்குவரத்து சேவை வழமைக்கு திரும்பியது. (அ-02)





# படகில் அவுஸ்திரேலியா புறப்பட்டவர்கள் கைது!

கொழும்பு, ஜுன் 25

கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லமுயன்ற மேலும் 35 பேர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பல நாள் மீன்பிடிப் படகின் ஊடாகவே அவர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றுள்ளனர். பாணந்துறை பிரதேசத்திலுக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் வைத்தே இவர்களை கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் ஆண்கள் 25 பேர், பெண்கள் நால்வர் மற்றும் சிறுவர்கள் அறுவரும் அடங்குகின்றனர்.

ஆட்கடத்தல் வர்த்தகத்துடன் தொடர்புடைய ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 6 வயதுக்கும் 56 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கற்பிட்டி மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (அ)

# நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய தருணத்திலும் போராடியவர்கள் நாங்கள்

## மத-அரசியல்-சிவில் பிரதிநிதிகள் கூட்டத்தில் மனோ

கொழும்பு, ஜூன். 25

**காலிமுக திடல் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், போராட்டத்தை நாம் அங்கிருந்து கற்றோம் என நீங்கள் நினைக்கக்கூடாது. நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள் நாங்கள். நாம் மதவாதத்தால், இனவாதத்தால், அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டு வரும் ஒரு இனம். இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்று அல்ல, பல்லாண்டுகளாக போராடி வருகிறோம். நாம் எப்போதும் ஜனநாயகப் போராளிகள்தான். அரசியலில் இருந்து மதம் அகற்றப்படவேண்டும். இலங்கை ஒரு மதச்சார்பற்ற நாடாக அறிவிக்கப்படவேண்டும். அதுவரை எம் ஜனநாயக போராட்டம் தொடரும் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

கொழும்பு பத்தரமுல்லை இம்பீரியல் மொனார்ச் விடுதியில் நேற்று நடைபெற்ற “சீர்திருத்தத்திற்கான கூட்டு” என்ற சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஓமல்பே சோபித தேரர் உட்பட மதத் தலைவர்கள், ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பிக்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

225 பேர் கொண்ட பாராளுமன்றம் என்ற சொற்பதம் இங்கே ஏற்பாட்டாளர்களினால் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. அந்த கும்பலில் எங்களைப் போடாதீர்கள். இந்த கோட்டாபய அரசாங்கத்தை நாங்கள் கொண்டு வரவில்லை. நாம் எப்போதும் இந்த ராஜபக்ஷக்களை எதிர்த்தே வந்துள்ளோம். நாங்கள் ஒடுக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதிகள். நீங்கள் சொல்லும் அந்த 225 பேர் வேறெங்கோ இருக்கிறார்களோ எனக்கு தெரியவில்லை. நான் அந்த கும்பலில் இல்லை என்பது எனக்கு தெரியும். நான் மக்களுடனேயே இருக்கிறேன். நான் கட்சி மாறி சோரம்போன அரசியல்வாதி இல்லை.

காலிமுக திடல் போராட்டத்தை நாம் கொள்கைரீதியாக ஆதரிக்கிறோம். “கோட்டா-கோ-ஹோம்” என்ற கோஷத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், அதற்காக இங்குள்ள பலரை போல நாங்களும், “கோட்டா-கோ-ஹோம்” என்ற கோஷத்தை, காலிமுக திடலில் இருந்தே கற்றோம் என எண்ண வேண்டாம். ஜனாதிபதி கோதாபய, இதைவிட பலமாக பாதுகாப்பு செயலாளர் கோதாபயவாக இருந்த போதே, “கோட்டா - கோ - ஹோம்” என கோஷம் எழுப்பி போராடியவர்கள், நாங்கள்.

எங்கள் கொழும்பில் எங்கள் மக்களை வெள்ளை வேனில் வந்து, பலவந்தமாக தூக்கி சென்ற வேளையில், 2005ம் ஆண்டிலேயே ராஜபக்சர்களை எதிர்த்து போராடியவன், நான். எனது சக போராளி நண்பன் நடராஜா ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டார். என்னைக் கொலை செய்ய முயற்சிகள் நிகழ்ந்தன.

இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்று அல்ல, பல்லாண்டுகளாக போராடி வருகிறோம். மதவாத, இனவாத, அரச பயங்கரவாதத்தை எதிர்த்து போராடியவர்கள், நாம். நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள், நாங்கள்.

ஆகவே காலிமுக திடல் போராட்டத்தில் இருந்து போராட நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். நாங்கள் கற்க அங்கு எதுவும் இல்லை. நாம் புது போராளிகள் அல்ல. நாம் எப்போதும் ஜனநாயக போராளிகள்தான். காலிமுக திடல் போராட்டத்தை நாம் கொள்கைரீதியாக ஆதரிக்கிறோம். அந்த போராட்டம் மூலம் வரும் மாற்றத்தை நாம் வரவேற்கிறோம். அந்த மாற்றத்தின் மூலம் இலங்கை அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எம் ஜனநாயக போராட்டம் தொடரும்- என்றார். (அ)

## மன்னாரில் பல மாதங்களின் பின் நேற்று லாப் எரிவாயு விநியோகம்

மன்னார், ஜூன் 25



மன்னார் நகர பகுதியில் பல மாதங்களின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை காலை லாப் எரிவாயு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள லாப் எரிவாயு முகவர் ஊடாக அது விநியோகிக்கப்பட்டது.

ஒரு தொகுதி 12.5 கிலோ மற்றும் 5 கிலோ நிறை உடைய லாப் எரிவாயு இவ்வாறு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

நீண்ட காலமாக மன்னாரில் லாப் எரிவாயு விநியோகிக்கபடாமையினால் பாவனையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில் நேற்று மக்களுக்கு எரிவாயு விநியோகிக்கப்பட்டது. (அ)

## ஜூன் 9 கலவரம் 7 பேருக்கு பிணை

கொழும்பு, ஜூன். 25

கொழும்பு-கோட்டை மற்றும் தலங்கம பிரதேசங்களில் கடந்த மாதம் 6 மற்றும் 9 ஆம் திகதிகளில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்த 7 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதற்கமைய, ஜகத் மனுவர்ண, தம்மிக்க முனசிங்க, எரங்க குணசேகர, ஜெஹான் அப்புஹாமி உள்ளிட்ட 7 பேரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டனர். (அ)



## மன்னாரில் சுகாதார ஊழியருக்கு நேற்று எரிபொருள் விநியோகம்

மன்னார், ஜூன் 25

மன்னார் நகர பகுதிகளில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கும் செயற்பாடு நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அனுமதி பெற்ற சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான சுகாதார ஊழியர்கள் வரிசையில் நின்று எரிபொருளை பெற்று சென்றனர். (அ)

## 400,000 கடவுச்சீட்டுக்கள் விநியோகம் 70,000 பேரே வெளிநாட்டுக்கு பயணம்

கொழும்பு, ஜூன் 25

ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை 400,000 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக் கப்பட்டுள்ள போதிலும் அதில் இதுவரை 70,000 பேர் மாத்திரமே வெளிநாடு சென்றுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளாந்தம் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை தற்போது 2,400 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் சேவை ஊடாக 1,000 வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதுடன் சாதாரண சேவையின் கீழ் 800 வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன.

அத்துடன் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் விண்ணப்பங்களைக் கையளிக்க முடியாதவர்களுக்கு பிறிதொரு தினம் வழங்கப்படுவதுடன் அவ்வாறு நாள் ஒதுக்கப்பட்டவர்களில் 600 பேரின் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்கள் நாளாந்தம் விநியோகிக்கப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக பிரவேசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## லஞ்ச ஊழல் வழக்கிலிருந்து குமார வெல்கம விடுதலை

கொழும்பு, ஜூன் 25

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து குமார வெல்கமவை விடுவிக் குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டது.

குறித்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது இலங்கை போக்குவரத்துச் சபையில் இல்லாத பிரதித் தலைவர் பதவியை உருவாக்கி அரசாங்கத்துக்கு சுமார் 3 மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (அ)

# முறையான அறிப்பு இல்லாவிடின் திங்கள் முதல் பணி பகிஷ்கரிப்பு

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

தமக்கு முறையான அறிப்பு இல்லையென்றால் திங்கள் முதல் பாடசாலைக்குச் செல்ல முடியாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில்சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்தி குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு ஏதாவது பொறிமுறையை உருவாக்குமாறு பல தடவைகள் அரசிடம், அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்தோம்.

அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. நாளுக்கு நாள் நெருக்கடிகள் அதிகரித்தே செல்கின்றன. பொதுமக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முரண்பாடுகள் உருவாக ஆரம்பித்துவிட்டன.

இந்த நிலையில் எமது போக்குவரத்துக்கான பொறிமுறை உருவாக்கப்படாவிட்டால் திங்கள் முதல் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாது என்பதனை கல்வி அமைச்சருக்கும் பெற்றோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியபோது, வடக்கு மாகாணத்தில் விசேடமாக தூர இடங்களுக்கு பணிக்குச் செல்லும் ஆசிரியர்களின் நிலை குறித்து பேசியனோம். அவர்கள் பாடசாலை அதிபருக்கு முறைப்படி அறிவிக்குமாறும் அதனை ஏற்றுக்கொள்ளாத அதிபர்கள் தொடர்பாக தமக்கு தகவல் தருமாறு கூறியுள்ளார்.

ஆகையால் தூர இடங்களுக்குப் பணிக்குச் செல்வோர் போக்குவரத்து இடர்ப்பாடு தொடர்பாக அதிபருக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்களுக்கான போக்குவரத்துகள் சீராகாவிட்டால் பாடசாலைக்குச் சமூகமளிக்க முடியாத சூழ்நிலையை பெற்றோர்கள் புரிந்துகொண்டு உங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பாது வீண் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இல்லையேல் பெற்றோராகிய நீங்களாவது ஒன்று சேர்ந்து ஒரு மார்க்கத்தை உருவாக்குங்கள்.

ஆசிரியர்களுக்கான போக்குவரத்து பொறிமுறை சீராகவில்லையென்றால் திங்கள் முதல் பாசாலைக்குச் செல்லவேண்டாம் என நாட்டில் உள்ள அனைத்து அதிபர், ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கின்றோம். இதற்கு அனைவரையும் ஒத்துழைக்குமாறு வினயத்துடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ)

# வாழைச்சேனை துறைமுகத்துக்கு அமைச்சர் டக்ளஸ் நேற்று விஜயம்

மட்டக்களப்பு, ஜூன். 25

மட்டக்களப்பு வாழைச்சேனை மீன் பிடி துறைமுகத்திற்கு கடற்றொழில் வள அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா விஜயமொன்றை மேற்கொண்டார்.

மீனவர்கள் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அதனுடன் கூடிய எரிபொருள் தட்டுப்பாட்டால் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் தீர்வு காணும் கலந்துரையாடலை மீனவர் அமைப்புக்கள் மற்றும் அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது மீனவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் கடற்றொழில் சார்ந்த பிரச்னைகள் முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

அதிலும் குறிப்பாக எரி பொருள் விடயம் தொடர்பாக துறைமுக முகாமையாளர் மற்றும் மீனவர் சங்க பிரதிநிதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

துறைமுகத்துக்கு நாளாந்தம் 19800 லீற்றர் டீசல் மற்றும் ஒரு கிழமைக்கு 19800 லீற்றர் மண்ணெண்ணெயும் கையிருப்பு இருந்தால் மட்டுமே பிரதேச மீனவர்களின் எரிபொருள் தேவையை நிவர்த்தி செய்ய முடியும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த விடயத்தை கேட்டறிந்துகொண்ட அமைச்சர் மண்ணெண்ணெயை யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறைமுகம் மற்றும் கொழும்புத் துறைமுகம் ஆகிய இரண்டு வழிகளில் இறக்குமதி செய்ய எண்ணியுள்ளதாகவும்

எதிர்வரும் திங்கள்கிழமை சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேசுவதாகவும் பதில் கூறினார். (அ)

# எரிபொருள் வரிசைகளில் அரச ஊழியர்களே அதிகம்

கொழும்பு, ஜூன். 25

அரச ஊழியர்களே அதிகளவில் எரிபொருள் வரிசையில் காத்திருக்கின்றனர் என அரச நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அநேகமான அரசாங்க நிறுவனங்களில் வரவுப் பதிவுக்காக கைவிரல் அடையாளம் பயன்படுத்தாத காரணத்தினால் அவர்கள் இவ்வாறு பணி நேரத்தில் எரிபொருள் வரிசையில் காத்திருப்பதாக அவர் கூறினார்.

மேலும் சிலர் காலம் தாழ்த்தியே பணிக்கு சமூகமளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சம்பளத்துடன் விடுமுறை பெற்றுக்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்காக காத்திருக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் அநேகமான அரசாங்க நிறுவனங்களின் பணிகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)





# எரிபொருள் தட்டுப்பாட்டால் குதிரை வண்டியில் பயணம்!

யாழ்ப்பாணம், ஜூன். 25

யாழ்ப்பாணத்தில் மீண்டும் குதிரை வண்டிப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்க அருட்தந்தை ஒருவர் தனக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகள் உள்ளமையால் குதிரை வண்டியில் தனது வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

நேற்று யாழ்.நகரத்தில் தனது வழமையான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு குதிரை வண்டியில் பயணம் செய்த அவரை வீதியில் பயணித்தோர் அனைவரும் வியப்புடன் அவதானித்தனர். (அ-03)

# தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கழுத்தறுக்கப்பட்டுக் கொலை!

## மாவிட்டபுரத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன். 25

மாவிட்டபுரம் - கொல்லங்கலட்டியில் வீட்டில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூதாட்டி அணிந்திருந்த நகைகள் உள்ள நிலையில் கொலைக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை மூதாட்டியின் வீட்டு வளாகத்திலுள்ள தோட்டத்துக்குத் தண்ணீர் இறைப்பதற்குச் சென்ற உறவினர் ஒருவர் மூதாட்டி குருதிக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டதை அறிந்து காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சாணை தவமணி (வயது-78) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)

# சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருளில் முன்னுரிமை

கொழும்பு, ஜூன். 25

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மருத்துவமனை நிர்வாகத்தின் ஊடாக எரிபொருளைப் பெறுவதற்கு ஊழியர்கள் பதிவு செய்யவேண்டும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு எரிபொருளை வழங்கும்.

நாடு முழுவதும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட 74 எரிபொருள் நிலையங்கள் மூலம் எரிபொருள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்து பேசினார் ஜி.எல்.பீரிஸ்

ருவாண்டா தலைநகர் கிகாலியில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சர்' எஸ்.ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

இது குறித்து ருவிட்டரில் எஸ்.ஜெய்சங்கர் வெளியிட்ட பதிவில், 'கொமன்வெல்த் மாநாட்டின் ஒரு பகுதியாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்தேன். கொமன்வெல்த் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், இலங்கைக்கு இந்தியா அளித்துவரும் உதவி குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வரும் இலங்கைக்கு இந்தியா இதுவரை ரூ.31,322 கோடி கடனுதவி அளித்திருப்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# விவசாய திணைக்களத்தின் ஊழியர்கள் விடுமுறை ரத்து

கொழும்பு, ஜூன். 25

ஜூலை 6ஆம் திகதி தொடக்கம் விவசாய திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்துச் செய்யப்படுவதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறித்த திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

யூரியா உரத்தை வினைத்திறனான முறையில் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட வேண்டியதன் காரணமாக இவ்வாறு ஊழியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்படுவதாகவும் விவசாயத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

ஆ.விஜய் ஆனந்த

# அதிமுக பொதுக்குழு:
# அவைத் தலைவர் நியமனம் எடப்பாடிக்கு துருப்பு சீட்டா?

சென்னை, ராயப்பேட்டை யில் உள்ள அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து கடந்த 14 ஆம் திகதி கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், ஒற்றைத் தலைமை குறித்து விவாதிக்கப்பட்ட தாகத் தெரிவித்தார்.

இது அ.தி.மு.க வட்டாரத் தில் அதிர்வலைகளை ஏற்படுத் தியது. இதன் தொடர்ச்சியாக, “ஜெயக்குமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்ற வாதம் ஓ.பி.எஸ் தரப்பில் முன்வைக்கப் பட்டது.

ஆனால், “ஒற்றைத் தலை மையாக எடப்பாடி பழனிசா மியே வர வேண்டும்“ எனக் கூறி பல்வேறு மாவட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. ஓ பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்) பக்கம் இருந்த முன் னாள் எம்.பி மைத்ரேயன், வேளச்சேரி அசோக் உள்பட ஏராளமான நிர்வாகிகள், எடப் பாடி பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, “பொதுக்குழு கூட்டத்துக்காக ஒருங்கிணைப்பாளரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 23 தீர்மானங் களைத் தவிர வேறு எதற்கும் ஒப்புதல் அளிக்கக் கூடாது” என்ற கோரிக்கையோடு, நீதிமன்றத்தை ஓ.பன்னீர்செல்வம் அணுகினார்.

இதையடுத்து, பன்னீர்செல்வத் துக்காக அ.தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் சண்முகம் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி கிருஷ் ணன் ராமசாமி, “பொதுக்குழுவை நடத்துவதற்கு தடையில்லை எனவும் அதேநேரம், விதிகளைத் திருத்துவது என்பது கட்சியின் உள்விவகாரம் என்பதால் அதில் தலையிட விரும்ப வில்லை” எனவும் தீர்ப்பளித்தார்.

இதனை எதிர்த்து அன்று இரவே ஓ.பி.எஸ் தரப்பினர் மேல்முறையீடு செய்தனர். இந்த வழக்கில், “பொதுக் குழுவை நடத்தத் தடையில்லை. 23 தீர்மானங்களைத் தவிர புதிதாக வேறு எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றக் கூடாது” என நீதிபதிகள் தீர்ப்பளித் தனர். இதனால் எடப்பாடி பழனிசாமி தரப்பினர் அதிர்ச்சியில் உறைந்தனர்.



### அவைத் தலைவராக தமிழ்மகன் உசேன்

தொடர்ந்து, வானகரத்தில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் பேசிய கே.பி.முனுசாமி, “அனைத்து தீர்மானங்களையும் பொதுக்குழு உறுப்பினர்கள் நிராகரித்துவிட்டனர். தொண்டர்கள் முன்வைக்கும் ஒரே கோரிக்கை என்பது ஒற்றைத் தலைமை வரவேண்டும் என்பதுதான். அந்த ஒற்றைத் தலைமை தீர்மானத்தோடு இணைத்து அடுத்த பொதுக்குழுவை தலைமை கூட்டும்போது அனைத்து தீர்மானங்களும் நிறைவேற்றப்படும்” என்றார். இதே கருத்தை வலியுறுத்தி சி.வி.சண்முகமும் பேசினார்.

இதையடுத்து, அ.தி.மு.கவில் அவைத் தலைவராக தமிழ்மகன் உசேன் நியமிக்கப்படுவதாக எடப்பாடி பழனி சாமி அறிவித்தார். அவருக்கு பொதுக் குழு உறுப்பினர்கள் கைத்தட்ட வேண்டும் என்று எடப்பாடி கேட்டுக் கொண்டார். ஒற்றைத் தலைமை சர்ச்சைக்கு மத்தியில் தமிழ்மகன் உசேன் பொறுப்பேற்றுக் கொண்டது, விவாதப் பொருளாக மாறியுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் ஜெய லலிதா மறைவுக்குப் பிறகு தேர்தல் ஆணையத்தில் ஓ.பன்னீர்செல்வம் முறையிட்டபோது, அவருக்குப் பக்கபலமாக அப்போதைய அவைத் தலைவர் மதுசூதனன் இருந்தார். தேர்தல் ஆணைய வழக்குகளில் மதுசூதனன் முன்னிறுத்தப்பட்டார். அவரது மறைவுக்குப் பிறகு தற்காலிக அவைத் தலைவராக தமிழ்மகன் உசேன் நியமிக்கப்பட்டார். தற்போது அவரை நிரந்தர அவைத் தலைவராக நியமித் துள்ளனர்.

அடுத்த பொதுக்குழு கூட்டம் ஜூ லை 11 ஆம் திகதி நடக்கவுள்ளதாகவும் தமிழ்மகன் உசேன் அறிவித்துள்ள சூழ லில், “அடுத்து என்ன நடக்கும்?” என்ற கேள்வி அ.தி.மு.க வட்டாரத்தில் எழுந்துள்ளது.

### யார் இந்த தமிழ்மகன் உசேன்?

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவரான தமிழ்மகன் உசேன், எம். ஜி.ஆர் மீது தீவிர பற்று கொண்டவர். அரசுப் பேருந்தில் ஓட்டுநராக பணி புரிந்து வந்தார் இவர். கடந்த 1972 ஆம் ஆண்டு தி.மு.கவில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்டபோது, நாகர்கோவிலில் இருந்து மேலூருக்கு தான் ஓட்டி வந்த அரசுப் பேருந்தை பாதியிலேயே நிறுத்திவிட்டு, எம்.ஜி. ஆருக்கு ஆதரவு தெரிவித் தார்.

தனது அரசுப் பணி யையும் ராஜினாமா செய்துவிட்டார். இதன் பின்னர், “எம்.ஜி.ஆர் தனிக்கட்சியைத் தொடங்க வேண்டும்” என வலியு றுத்தியவர்களில் ஒருவ ராக இருந்தார். அவ் வாறு எம்.ஜி.ஆர் தனிக் கட்சியைத் தொடங்க வேண்டுமென சென்னை அடையாறில் உள்ள சத்யா ஸ்டூடியோவில் நடைபெற்ற கூட்டத்தில் கையொப்பமிட்ட 11 பேரில் ஒருவராக தமிழ் மகன் உசேன் இருந்தார்.

ஆனால், கன்னியா குமரி மாவட்டத்தில் தளவாய் சுந்தரத்தைத் தாண்டி அவரால் செயல்பட முடிய வில்லை. அ.தி.மு.கவின் தொடக்க காலத் தொண்டர்களில் ஒருவராகப் பார்க்கப்படும் தமிழ்மகன் உசேன், கடந்த அ.தி.மு.க ஆட்சியில் வக்பு வாரியத் தலைவராகவும் பணியாற்றினார்.

தனக்கு அவைத் தலைவர் பதவி கொடுக்கப்பட்டது குறித்து பொதுக் குழுவில் பேசிய தமிழ்மகன் உசேன், “68 ஆண்டுகாலம் பொதுச் சேவையில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு இந்த இயக்கத்தின் எளிய தொண்டனாக எந்தவித மனச் சங்கடங்களுக்கும் இடம் கொடுக்காமல் இருந்ததைப் புரிந்து கொண்டு என்னை கவுரவிக்கும் வகை யில் அவைத் தலைவர் பதவி கொடுக்கப் பட்டுள்ளது.

ஓர் ஏழைத் தொண்டனும் இந்தச் சபையில் அவைத் தலைவராகலாம் என்ற வரலாற்றை உருவாக்கித் தந்துள்ளனர்“ எனக் குறிப்பிட்டு, கட்சியின் ஒருங்கி ணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பா ளர் என இருவருக்கும் நன்றி தெரிவித் தார்.

### அவைத் தலைவர் நியமனம் செல்லுமா?

இந்தநிலையில், “23 வரைவுத் தீர்மானங்களில் தமிழ்மகன் உசேனின் தேர்வும் இருக்கிறது. ஆனால், தீர்மா னங்களை முற்றாக நிராகரிப்பதாகக் கூறிவிட்டதால் இந்த நியமனம் செல் லுமா?“ என மூத்த பத்திரிகையாளர் ஷ்யாமிடம் கேட்டபோது,



“ பொதுக்குழுவில் ஒருங்கிணைப் பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் தேர்தல், மாவட்ட அளவிலான தேர்தல், வரவு செலவு கணக்கு, அவைத் தலைவர் தேர்வு என அனைத்துமே அந்த 23 தீர்மானங்களுக்குள் அடங்கும். குறிப்பாக, வரவு செலவை கணக்கை பொதுக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது விதி. அதிலும், பொருளாளர் என்ற முறையில் ஓ.பன்னீர்செல்வம்தான் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்காக நேற்றே வரவு செலவு கணக்குகளை அவரிடம் ஒப்படைத்துவிட்டனர். இரங்கல் தீர்மானம், தி.மு.க அரசைக் கண்டிப்பது, மேக்கேதாட்டு விவகாரம் என பல தீர்மானங்கள் அதில் இடம்பெற்றிருந்தன. இவற்றையெல்லாம் நிராகரிப் பதாக சற்று உற்சாகமாகவே சி.வி.சண்முகம் கூறிவிட்டதாகப் பார்க்க முடிகிறது. அதேநேரம், பொதுக்குழுவுக்கு என சில வரையறைகள் உள்ளன” என்கிறார்.

தொடர்ந்து பேசிய ஷ்யாம், “அ.தி.மு.க விதிகளின்படி இல்லாவிட்டாலும் சட்டரீதியாக இதனைப் பார்க்க வேண்டும். சட்டம் என்பது மூன்று வகைப் படும். முதலில், சட்டத்தின் முன் அனைவரும் சமம், இரண்டாவது, சட்டத்தின் பார்வையில், மூன்றாவதாக சட்டத்தின்கீழ் எனப் பார்க்கலாம். அப்படிப் பார்த்தால் இந்தப் பொதுக்குழு செல்லத்தக்கதா என்ற கேள்வி எழுகிறது“ என்கிறார்.

“தமிழ்மகன் உசேனின் நியமனம் எந்தளவுக்கு முக்கியமானது?” என் றோம். “அவைத் தலைவர் பதவி என்பது கூட்டத்துக்குத் தலைமை தாங்குவது மட்டும்தான். அண்ணா தி.மு.கவின் உள்கட்சி விதி என்பது தேர்தல் ஆணையத்தின் இணைய தளப் பக்கங் களில் இருப்பதுதான். அ.தி.மு.கவின் அனைத்து அதிகாரங்களும் ஒருங்கி ணைப்பாளருக்கும் இணை ஒருங்கி ணைப்பாளருக்கும் இருக்கிறது. அந்த விதியை பொதுக்குழுவில் திருத்த வில்லை.

பொதுக்குழுவை கூட்டும் அதிகாரம் என்பது ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரிடம் உள்ளது. அப்படித்தான் இந்தப் பொதுக்குழுவையும் இருவரும் கூட்டினார்கள். அது விதியில் மிகத் தெளிவாகவும் உள்ளது. அப்படிப் பார்த்தால் அவைத் தலைவர் கூட்டு கின்ற பொதுக்குழு மட் டும் எப்படி செல்லுபடி யாகும்?” என்கிறார்.

### 2 தேர்வுகளில் வென்ற எடப்பாடி

“ 1971 ஆம் ஆண்டு சாதிக் அலி வழக்கில் உச்ச நீதிமன்றம் வகுத்துக் கொடுத்த வழிகாட்டும் நெறிமுறைகளின்படி கட்சி களில் பிளவு ஏற் பட்டால் மூன்று வகையான முறை யில் பெரும்பான்மை கவனிக்கப்படும்.

அதைத்தான் எப் போதும் தேர்தல் ஆணையம் உதார ணமாகக் காட்டுகிறது. முதல் பரிசோ தனை என்பது கட்சியின் எம்.எல்.ஏ, எம். பிக்களில் எவ்வளவு பேர், யார் பக்கம் இருக்கிறார்கள் என்பது, அடுத்ததாக, கட்சியின் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களில் யார், யார் பக்கம் இருக்கிறார்கள் என்பது, மூன்றாவது கட்சியின் விதிகளின்படி யார் பக்கம் அதிக பெரும்பான்மை இருக்கிறது என்பது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு



# பொருளாதாரப் பேரிடர் ஏற்படுத்தும் சமூகத் தாக்கங்களும் அதனை எதிர்கொள்ளலும்

**மருத்துவர் சி. யமுனாநந்தா**

தற்போதைய பொருளாதாரப் பேரிடர் சமூக மட்டங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை நாம் ஆராய்ந்து அவற்றை அனுகூலமான முறையில் எதிர்கொள்ளல் அவசியமானதாகும்.



தற்போதைய சூழலில் அத்தியாவசியமான பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் பட்டினியை எதிர்நோக்கி உள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

தற்போதைய பொருளாதாரத் தளம்பல் நிலைக்கு உள்நாட்டுக் காரணிகளும், சர்வதேச காரணிகளும் காரணமாக உள்ளன. உள்நாட்டுக் காரணிகளுள் முறையற்ற திட்டமிடல்கள், நிதி நிர்வாகம் என்பனவும், ஊழல், இனவாதம், மதவாதம் மிக்க அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அமைகின்றன.

பொருளாதாரத் தளர்வுக்கான சர்வதேசக் காரணிகளில் ரஷ்யா மேற்கொண்டுள்ள உக்ரெயின் போர் முதன்மையானதாகவும், கொரோனாத் தொற்றுத் தொடர்பான பொருளாதார முடக்கம் இரண்டாவதாகவும், கால நிலை மாற்றத்தினால் ஏற்பட்ட விவசாய வீழ்ச்சி மூன்றாவதாகவும் அமைகின்றன.

இந்நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்பினை ஐந்து தளங்களில் அவதானிக்கலாம். அவையாவன :

1)அரசியல் ஸ்திரமற்றநிலை

2)சமூகவர்க்கமட்ட உடைவு

3)சமூக உள இடையீட்டு முதலுதவியின் தேவையின் அதிகரிப்பு ஏற்பட்டு உள்ளமை.

4)நுண்ணிதிய விருத்தியில் சமூக மூலதனப் பற்றாக்குறை காணப்படுகின்றமை.

5)நிலைபேறான சமூக அமைப்பை பேணமுடியாத நிலைமை காணப்படுகின்றமை.

தற்போதைய பஞ்சத்தில் அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் குற்றம் காணுவது மக்களுக்கு எவ்வித பலனையும் தரப்போவதில்லை.

அரசனும் ஆண்டி ஆவான் என்பது போல் தற்போது எரிபொருள் இன்மையால் கோடிக்கணக்கான பெறுமதியான வாகனம் ஓர் அங்குலம் நகரமுடியாது உள்ளது. சில ஆயிரம் பெறுமதியான வாகனங்களும் ஓர் அங்குலம் நகர முடியாதுள்ளது.

இவ்வாறே அத்தியாவசியமான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் அனைவரும் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. இவைகள் சமூக வர்க்க மட்ட உடைவுக்கு உதாரணமாக அமைகின்றன. இதனை பங்கீட்டு அடிப்படையிலான பண்டமாற்றுக்கள் மூலமே எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உள்ளது.

தற்போதைய சூழலில் சமூக உள இடையீட்டு முதலுதவி (Psychosocial Intervention First Aid) அதிக அளவில் தேவைப்படுகின்றது.

சமூக உள இடையீட்டு முதலுதவி என்பது பேரிடர் நேரத்தில் சமூகம் சோர்வடைந்து போகாமலும், எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை ஏற்படுத்தும் வகையிலும் சமூகமட்டத்தில் உதவுதல் ஆகும்.

இப்பேரிடர் காலத்தில் இந்திய அரசினால் எமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மருந்துகளும், உணவுப் பொருட்களும், எரிபொருட்களும் இவற்றுள் அடங்கும். இவை சமூகம் ஆறுதல் அடையவும், நெருக்கீட்டினை ஆக்கபூர்வமாக அணுகவும் ஓர் இடைவெளியினை அளிக்கும். சமூக வன்முறைகள், கலகங்கள் ஏற்படுவதனைத் தடுக்கும்.

சமூக இயக்கத்தில் குடும்பப் பொருளாதார விருத்தி என்பது நுண்ணிதிய விருத்தி ஆகும். இன்று பலர் வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை ஈட்ட முடியாது திணறுகின்றனர்.

இந்நிலையில் சிறிய சிறிய தொழில் முயற்சிகள் ஊக்குவிக்கப் படல் வேண்டும். கடந்த காலங்களில் எமது பிரதேசங்களில் பொருளாதாரத்தடை இருந்தபோது எரிபொருட்களைப் பல தடைகளைத்தாண்டி சில போத்தல்களில் எடுத்துவந்து வியாபாரம் செய்து பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை உருவாக்கினர். பலர் துவிச்சக்கர வண்டிகளில் விறகுகளை எடுத்து விற்பனை செய்தனர்.

இவ்வாறான தொழில் முயற்சிகளை நாம் தற்போது கச்சதீவு பொருளாதார மீட்புவலயம் அமைத்து மேற்கொண்டால் யாழ்ப்பாணத்தில் சுமார் 50,000 பேருக்குரிய வாழ்வாதாரம் நேரடியாகக் கிடைக்கும். மாறாக கப்பலில் கடனடிப் படையில் எரிபொருட்களையும், எரிவாயுவையும் பெற்று சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்கு விநியோகித்தால் பணத்தினை உழைக்க முடியாது. மாறாக காசு அடிக்கும் இயந்திரம் மூலம் உருவாக்க வேண்டிய சூழலே தொடரும். இதனால் நாள்தோறும் பணவீக்கம் அதிகரிக்கும்.

பொருளாதார நெருக்கடி நிலையில் சிறுதொழில் முயற்சிகள், சில்லறை வர்த்தகம், விவசாயம், கடற்றொழில் என்பன ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

இவற்றுக்குரிய சமூக மூலதனத்தை நாம் கூட்டுறவாகத் திரட்டல் அவசியம். தனிநபர் முதலாளித்துவம் தவிர்க்கப் படல் வேண்டும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி உலகம் முழுவதும் ஓர் அலைபோல் தாக்கத்தைச் செலுத்தும். எனவே தற்போதைய சூழலில் நாட்டை விட்டு வெளியேற முடிவெடுத்தல் என்பது நிலவுக்கு அஞ்சி பரதேசம் போவது போல் ஆகும்.

ஒவ்வொருவரும் தமது குடும்பத்தை நிலைநிறுத்தி தாம் சார்ந்த சமூகத்தைச் சிதையவிடாது காத்தல் அவசியம். சமூக இயக்கம் என்பது வெறுமனே அரசியல் தளத்தில் நகரும் பொறிமுறை அல்ல. எனவே அரசியல் காழ்ப்புணர்வுகளை இனவன்மங்கள், மதவன்மங்கள், வெறுக்கத்தக்க பேச்சுக்கள் என்பவற்றைச் சமூகத்தில் பரப்பல் தவறானது.

தற்போதைய மனிதநேய நெருக்கடியினை பொறுப்புடன் உற்றுநோக்கி ஆக்கபூர்வமாகச் செயற்படுவது அனைவரதும் கடமையாகும். அன்றேல் நாம் பேரிடரால் காவு கொள்ளப்பட்டு விடுவோம்.




# அதிமுக பொதுக்குழு...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் விதிகளின்படி உள்ள பெரும்பான்மைக்குள் தேர்தல் ஆணையம் செல்வதில்லை. காரணம் அது சிவில் விவகாரம் என்பதுதான். முதல் இரண்டு பெரும்பான்மைகளில் எடப்பாடி பழனிசாமி தேறிவிட்டார். இதில், ஓ.பன்னீர்செல்வத்துக்கு எந்தவித வாய்ப்பும் இல்லை" என்கிறார்.



"இதுபோன்ற நேரங்களில் அவைத் தலைவர் யார் பக்கம் என்பது முக்கியவத்தும் வாய்ந்ததா?" என்றோம்.

"ஆமாம். மதுசூதனனை சசிகலா தரப்பு கோட்டைவிட்டதால் அவர் ஓ.பி.எஸ் பக்கம் சென்றார். தேர்தல் ஆணையத்தில் ஓ.பி.எஸ் அளித்த மனுவில் முதல் நபராக மதுசூதனன் இருந்தார். சபாநாயகருக்கு பெரிய அதிகாரம் இல்லையென்றாலும் சட்டமன்றத்தில் கட்சி பிளவுபடும்போது அவர் எடுக்கின்ற முடிவு முக்கியமானதாக இருக்கும். அதைப் போலத்தான் இதுவும்" என்கிறார்.

**அடுத்தகட்டம் என்ன?**

"இதன் அடுத்தகட்டம் என்னவாக இருக்கும்?" என்றோம். "அ.தி.மு.கவில் மேலும் மேலும் குழப்பம்தான் நீடிக்கும். தற்போது வரையில் எந்தத் தெளிவும் பிறக்கவில்லை. கட்சி இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது.

அடுத்தகட்டமாக ஒருவரை ஒருவர் கட்சியைவிட்டு நீக்கும் காட்சிகள் நடக்கலாம். அ.தி.மு.கவுக்குள் ஓ.பி.எஸ்ஸுக்கு இனி முக்கியத்துவம் இல்லை என்பது தெரிந்துவிட்டது. இரட்டை இலை முடங்கினாலும் முடங்காவிட்டாலும் அவருக்குப் பிரச்னையில்லை. இதன்பிறகு போட்டி அ.தி.மு.கவை தொடங்கப் போகிறார்களா எனப் பார்க்க வேண்டும்" என்கிறார்.

மேலும், "நடந்த பொதுக்குழு கூட்டத்திலும் மிகுந்த பதற்றத்தில் எடப்பாடி பழனிசாமி இருந்தார். மாலை போட வந்தவர்களையும் அவர் சாடினார். பழைய தேர்தல் ஆணைய வழக்குகளில் மனோஜ் பாண்டியன் சூத்திரதாரியாக இருந்தார். அவர் ஓ.பி.எஸ் பக்கம் இருக்கிறார். ஓ.பி.எஸ் எந்த எல்லைக்கும் செல்வார். இனி வரும் நாள்களில் செய்திகளுக்குப் பஞ்சமிருக்காது. தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், இறுதியில் அதர்மமே வெல்லும்" என்றார் ஷ்யாம்.

(பிபிசி)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், ............................... போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

**CHANNEL-1**

**18.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**CHANNEL - 2**

**18.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கடலம்மன் ஆலயத்தில் பாலாஸ்தாபனம் நடந்தது

மட்டக்களப்பு, ஜூன் 25

கிழக்கின் பழமை வாய்ந்ததும் பிரசித்திபெற்றது மான ஸ்ரீ கடலம்மன் ஆலயத்தின் பாலஸ்தாபனமும், தானியாதிபதி வாசமும் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பிரதம குரு செந்தில் ராஜ சிவச்சாரியார் தலைமையில் நடைபெற்ற இந்த பூசையில் நூற்றுக் கணக்கான பக்தர் கள் அம்மனுக்கு தானியாதிபதி வாசம் (நெல் மணி களால்) செய்தனர்.

அண்மையில் வருடாந்த திருச் சடங்கு நடை பெற்றதைத் தொடர்ந்து ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடந்து 12 வருடங்கள் கழிந்த நிலையில், ஆலய கட்டமைப்பில் சிறிது மாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய பாலஸ்தாபனம் செய்துவைக்கப்பட்டதாக ஆலய வண்ணக்கர் என். கமல்ராஜ தெரிவித்தார். எனினும், வழக்கம்போல ஆலயத்தில் செவ்வாய் மற்றும் பூரண பூஜைகள் இடம்பெறுமெனவும் தெரிவித்தார். (ஐ)

# பிள்ளையானின் குற்றங்கள் தொடர்பில் மனித உரிமை பேரவையில் சாட்சியம்!

கொழும்பு, ஜூன் 25

தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பல கொலைகள் மற்றும் குற்றச்சாட் டுக்கள் குறித்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு முக்கிய தகவல்களை அளித்துள்ளார் என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல், பல கொலை கள் மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான முக்கிய தகவல்க ளையே அவர் வெளியிட்டார் என்று இராஜதந்திர வட்டாரங் களை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

குறித்த நபர், கொழும்பிலும் வெளிநாட்டிலும் உள்ள சில முக் கிய இராஜதந்திர தூதரகங்களுக்கு தம்மிடம் உள்ள தகவல்களின் சுருக் கமான விபரங்களைக் கடிதம் மூலம் தெரிவித்தார் என்றும், இதன்பின் னர் அவர் உயிருக்கு பயந்து, சமீ பத்தில் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தா ரெனவும் கூறப்படுகின்றது.

மேலும் அவர், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அதிகாரி களைச் சந்தித்து தமிழ் மக்கள் விடு தலைப் புலிகள் கட்சியும் ஏனைய வர்களும் செய்த குற்றங்கள் தொடர் பான வாக்குமூலங்களை வழங்கி னார். ஐ. நா. அதிகாரிகள் சுமார் 5 நாட்கள் அவரிடம் இருந்து வாக்குமூலங்களை பதிவு செய்தனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் நடராஜா ரவிராஜ் ஆகி யோரின் கொலை மற்றும் ஊடக வியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல்போன சம்பவத்துடன் தொடர்புடைய தகவல்களை அந்த நபர் வெளிப்படுத்தியுள்ளார் என் றும் அந்தச் செய்தியில் கூறப்பட் டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலி கள் கட்சி நேரடியாகவும் மறை முகமாகவும் செய்த கொலைகள் பற்றிய விவரங்களையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். ஐ. நா. மற்றும் இராஜதந்திர வட்டாரங் களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் முன்னைய அரசாங்கத்துடன் தொடர்புடைய சிலர் மீது நேரடி யாக குற்றச்சாட்டுகளை சுமத்தும் வகையில் அமைந்துள்ளன என்றும் இந்த தகவல்களை அடிப்படை யாகக்கொண்டு, ஐ.நாவும் தூதரகங் களும் என்ன நடவடிக்கையை எடுக்கப்போகின்றன என்பது தெரியவில்லை என ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் ஐ.நாவிடம் இருந்து இந்த விடயம் குறித்து அறிய முயற்சித்தபோதி லும் பயனளிக்கவில்லையெனவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித் துள்ளது. (ஐ)

# ஆசிரியர்களின் விடுமுறை; சுற்று நிருபத்தை வெளியிடுக!

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 25

ஆசிரியர்களின் விடுமுறை மற்றும் கைவிரல் அடையாள இயந்திர பயன் பாடு தொடர்பில் சுற்று நிருபம் ஒன்றை நடைமுறைப்படுத்தி, அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா அனுப்பி யுள்ள அந்தக் கடிதத்தில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசா தாரண சூழ்நிலையில் ஆசிரியர் தொடர் பாகப் பல்வேறு பிரச்னைகள் முன்வைக் கப்படுகின்ற போதிலும் மாணவர் கல்வி நலனுக்குப் பாதிப்பில்லாத வகையில் தங்களால் முன்னெடுக்கப்படும் விட யங்களை நாம் பாராட்டுகின்றோம்.

எரிபொருள் பிரச்னை ஏற்பட்டுள்ள இக்காலப்பகுதியில் கல்வியமைச்சு விடுத் துள்ள பொதுவான அறிவுறுத்தல்களுக் கமைய, பாடசாலைகளை முன்னெடுத் துச் செல்லல் தொடர்பில் தங்களால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்க மைய சில அதிபர்கள் செயல்படுகின்ற விதம் பாராட்டுக்குரியதாக அமைந் துள்ள போதிலும், பல அதிபர்கள் ஆசிரியர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்களாகத் தான்தோன்றித் தனமாகச் செயல்படுகின்றனர்.

இதற்கு வலயக் கல்விப்பணிமனை உயர் அதிகாரிகள் சிலரும் உடந்தையாக இருக்கின்றனர். எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது தொடர்பில் அதிபர்களுக்கான தெளிவின்மையும் இவ்வாறான முறைகேடுகள் நடைபெறுவ தற்கான காரணமாகும்.

எரிபொருள் பிரச்னையால் முழு நாடும் முடங்கிப் போயுள்ள நிலையில் தூர இடங்களுக்குச் செல்கின்ற ஆசிரியர் களை பாடசாலைக்கு எவ்வாறாயினும் வர வேண்டும் எனக் கட்டாயப்படுத்து வது, வராவிட்டால் சொந்த விடுமுறை யாகக் கருதுவதாகப் பயமுறுத்துவது, கைவிரல் அடையாள இயந்திரத்தின் பயன்பாட்டை முன்வைத்து ஆசிரியர் களின் விடுமுறையைக் கணக்கெடுப்பது உள்ளிட்ட அராஜகங்கள் அதிபர்களால் அரங்கேறி வருகின்றன. எனவே, இது விடயத்தில், உடனடியாக நடவடிக்கை எடுத்து சுற்று நிருபம் ஒன்றை வெளியி டுமாறு - கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# விவசாயிகள், மீனவர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டது!

மட்டக்களப்பு, ஜூன் 25



எரிபொருளுக்கு நாடு முழுவ தும் நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட் டத்திலும் நீண்ட வரிசைகள் நேற்றும் காணப்பட்டன.

இந்நிலையில், தற்போது விவசாய செய்கை அறுவடை காலம் தொடங்கியுள்ளது. அத் துடன், தோட்ட செய்கையில் ஈடுபடுவோர், கடற்றொழிலா ளர்கள் டீசல், மண்ணெண் ணெயை பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கோறளைப்பற்று மத்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று வெள்ளிக் கிழமை முன்னுரிமை அடிப்படையில் எதுவித பாகுபாடுகளுமின்றி கடற் றொழிலாளர்கள், விவசாயிகளுக்கு டீசல் வழங்கப்பட்டது.

கோறளைப்பற்று மத்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டு தமிழ், முஸ்லிம் மீனவர்கள், விவசாயிகளுக்கு வழங்கப் பட்டதாக கோறளைப்பற்று மத்தி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஐ)

# காத்தான்குடி பொலிஸாருக்கு பெற்றோல் விநியோகம்!



மட்டக்களப்பு, ஜூன் 25

காத்தான்குடி பொலிஸ் நிலை யத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு வாரத்தின் பின்னர் பெற்றோல் வழங்கப்பட்டது.

பொலிஸாருக்கு எரிபொருள் வழங்கப்படாமையால் தமது கட மைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் களை எதிர்கொண்டு வந்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத்மா சிங்கவிடம் விடுத்த வேண்டு கோளையடுத்து, அவர் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத் துக்கு கொண்டுவந்தார்.

அரசாங்க அதிபர் ஆரையம் பதி பிரதேச செயலாளரைப் பணித் ததற்கமைய, ஆரையம் பதி பல நோக்கு கூட்டுறவுச் சங்க எரி பொருள் நிரப்பு நிலையத் தில் பொலிஸாருக்கு பெற்றோல் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# உதவி தேவையான குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் அன்பளிப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 25

உதவி தேவையான சிறார்களின் குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப் பட்டன.

மண்முனைப்பற்று பிரதேச செய லகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணா கரன் பங்கேற்று உலருணவுப் பொதி களை வழங்கி வைத்தார்.

இந்த உலருணவு பொதிகளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான ஜெரி நிறுவனம் வழங்கியிருந்தது.

ஜெரி நிறுவனம் 14 பிரதேச செயலர் பிரிவுகளுக்குமாக உலருணவுப் பொதி களை வழங்கியிருந்தது. சம்பிரதாய பூர்வமாக மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில் இந்த உலருணவுப் பொதி கள் வழங்கப்பட்டன. (ஐ)





# கொரோனாவின் 5ஆவது அலை மெக்சிக்கோவில் பரவுகின்றது!

மெக்சிக்கோ சிற்றி, ஜூன் 25

மெக்சிக்கோவில் கொரோனா தொற்றின் 5ஆவது அலை பரவி வருவதாக அச்சம் வெளியிடப் பட்டுள்ளது.

நாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை 16,133 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய் யப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதத்தின் பின்னர் ஒருநாளில் பதிவான அதிகபட்ச தொற்றா ளர் தொகை இதுவாகும்.

இந்த அதிகரிப்பு வைரஸின் மற்றோர் அலை நாடு முழுவ தும் பரவுகிறது என்பதற்கான சமிக்ஞையாகும் என்று நிபுணர் கள் கூறுகின்றனர். கடந்த ஒன் பது வாரங்களாக தொற்று நோயா ளர் தொகை சடுதியாக அதிக ரித்து வருவதை காண்கிறோம். இது நல்ல செய்தியல்ல என மெக்சிக்கோ துணை சுகாதார அமைச்சர் ஹ்யூகோ லோபஸ்-கேடெல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நாட்டில் பெரும்பாலும் ஒமிக்ரோன் டீயு.4 மற்றும் BA.5 துணை திரிபுகளே பரவி வரு கின்றன. இது சளி போன்ற அறி குறிகளை ஏற்படுத்துகிறது என்று லோபஸ்-கேடெல் கூறினார்.

ஆனால், இறப்புக்கள் அதிக ரிக்கவில்லை என்பதே ஆறுதல் அளிக்கும் செய்தியாக உள்ளதா கவும் அவர் தெரிவித்தார். மெக்சிகோவில் கடந்த ஏழு நாட்களில் சராசரியாக ஒரு நாளைக்கு 24 கொவிட் இறப் புகள் பதிவாகியுள்ளதாக சுகா தார அமைச்சின் தரவுகள் தெரி விக்கின்றன. (ஐ)

# துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டம் அமெரிக்க செனட்டில் நிறைவேற்றம்!

வாஷிங்டன், ஜூன் 25

அமெரிக்காவில் பொதுமக் கள் துப்பாக்கி வைத்திருப்பதற் கான கட்டப்பாடு தொடர்பான திருத்தத் தீர்மானத்தை செனட் சபை நிறைவேற்றியுள்ளது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளின் பின்னர், துப்பாக்கி தொடர் பாக அந்த நாட்டில் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட் டுள்ளது.

ஆளும் ஜனநாயகக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் கள், குடியரசுக் கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர்களின் ஆத ரவுடன் 65 ஆதரவு வாக்குக ளுடன் இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. எதிராக 33 வாக்குகள் அளிக்கப்பட்டன.

எனினும், அமெரிக்க விதிக ளின்படி, இந்தத் தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் வாக்கெ டுப்புக்கு விடப்பட்ட பின்னர், அமெரிக்க ஜனாதிபதியின் ஒப்பத்துடன் சட்டமாக நிறை வேற்றப்படும்.




இந்தச் சட்டம் நடை முறைக்கு வரும்பட்சத்தில், தனி நபர்கள் சக்திவாய்ந்த துப்பாக் கிகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படாது, என்ப துடன் பல்வேறு கட்டுப்பாடு களும் விதிக்கப்படும்.

கடந்த மாதம் மட்டும் அமெரிக்காவில் ஆரம்பப் பாட சாலை மாணவர்கள் உட்பட 31 பேர் துப்பாக்கி சூட்டு சம்பவங் களால் உயிரிழந்தனர். இதைய டுத்து, துப்பாக்கி வைத்திருப்ப தற்கான கட்டுப்பாடுகள் இறுக்கமாக்கப்பட வேண்டும் என்று அங்கு வலுவான கோரிக் கைகள் எழுந்தன என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# ஆங் சான் சூகி தனி சிறையில்!

யங்கூன், ஜூன் 25

மியன்மாரின் முன்னாள் ஜனநாயக ஆட்சியாளர் ஆங் சான் சூகி, தலைநகர் நேபிடா வில் உள்ள தனி சிறைக்கு மாற் றப்பட்டுள்ளார் என்று அதி காரிகள் தெரிவித்தனர்.

தேர்தலில் முறைகேடு நடந் ததாகக் கூறி ஆங் சான் சூகியின் அரசை இராணுவம் கடந்த 2021 பெப்ரவரியில் கலைத் தது. அப்போது சூகி வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். எனினும், அவர் மீது இராணுவ ஆட்சியாளர்கள் சுமத்திய பல் வேறு முறைகேடு வழக்குகளில் அவருக்கு நீதிமன்றம் 11 ஆண் டுகள் சிறைத் தண்டனை விதித் தது. எனினும், வீட்டுச் சிறை யில் உதவியாளர்கள் மற்றும் செல்ல நாயுடன் வசிக்க அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், சட்ட விதி முறைகளின் கீழ் அவர் தனி சிறைக்கு மாற்றப்பட்டுள்ளா ரென அரசு தெரிவித்துள்ளது.

# ரஷ்ய தாக்குதலில் உக்ரைனின் 150 பாரம்பரிய தளங்கள் அழிப்பு!

## யுனெஸ்கோ நிறுவனம் அறிவிப்பு


நியூயோர்க், ஜூன் 25

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போரில் உக்ரை னிலுள்ள 150இற்கும் அதிக மான பாரம்பரிய தளங்கள் ரஷ்யாவால் அழிக்கப்பட்டுள் ளன என்று தகவல் வெளியாகி யுள்ளது.

ஐ. நாவைச் சேர்ந்த வல்லு நர்கள் இந்தத் தகவலை தெரி வித்துள்ளனர்.

அதில், 150இற்கும் அதிக மான பாரம்பரிய மற்றும் கலா சாரம் சார்ந்த தளங்கள் பகுதி யாகவோ அல்லது முழுமையா கவோ அழிக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

அழிக்கப்பட்டுள்ள தளங்க ளில் அருங்காட்சியகங்கள், நினைவுச் சின்னங்கள், தேவால யங்கள் மற்றும் மதம் சார்ந்த கட்டடங்கள், நூலகங்கள் ரஷ் யப் படைகளால் தாக்கி அழிக் கப்பட்டன. இந்தத் தகவலை யுனெஸ்கோ உறுதிப்ப டுத்தியுள்ளது.



இது குறித்து யுனெஸ்கோ வின் பணிப்பாளர் தெரிவிக்கை யில், “உக்ரைனின் கலாசாரம் சார்ந்த தளங்களில் ரஷ்யா தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். எந்த ஒரு சூழலிலும் கலாசாரம் சார்ந்த தளங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது.” என்றார்.

உக்ரைன் தரப்பில், ரஷ்யா யுனெஸ்கோவில் இருந்து நீக் கப்பட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த மாதம் ரஷ்யாவின் தலை மையில் நடைபெறவிருக்கும் உலக பாரம்பரியத் தளங்களுக் கான கூட்டத்தை தள்ளிவைக்க வேண்டும் எனவும் கேட்கப் பட்டுள்ளது. (ஐ)



# பின்வாங்குகின்றது உக்ரைன்! லுஹான்ஸ் ரஷ்யா வசமாகிறது!

கீவ், ஜூன் 25

கிழக்கு உக்ரைன் - லுஹான்ஸ் பிராந்தியத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி இரண்டு நகரங் களான லைசிசான்ஸ்க் மற்றும் சீவிரோடோனெட்ஸ்கில் இருந்து உக்ரைன் துருப்புக்கள் பின்வாங்க வேண்டியிருக்கலாம் என்று பிராந்திய ஆளுநர் செர்ஹி கெய்டாய் தெரிவித்துள்ளார்.

உக்ரேனிய துருப்புக்கள் குறுகிய பகுதிக்குள் சுற்றி வளைக்கப்படுவதை தவிர்ப்ப தற்காக இந்த முடிவை எடுக்க வேண்டியேற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் படைகள் இவ்வாறு பின்வாங்கினால் லுஹான்ஸ் பிராந்தியத்தை முழுமையாகக் கைப்பற்றும் ரஷ்யாவின் முக்கிய குறிக்கோளுக்கு அது வலுச் சேர்க்கும்.

ஒரு நதியால் பிரிக்கப்படும் லைசிசான்ஸ்க் மற்றும் சீவிரோ டோனெட்ஸ் நகரங்கள் தற் போது முக்கிய போர்க்களமாக மாறியுள்ளன. இங்கு சண்டை உச்சகட்டத்தை நெருங்குகிறது என லுஹான்ஸ் பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தற்போது லைசிசான்ஸ்க் நகரில் இருந்து 5 கி.மீ. தொலைவில் ரஷ்ய துருப்புக் கள் நிலைகொண்டுள்ளன. இந் நகரில் உள்ள உக்ரேனிய படை களைச் சுற்றி வளைக்க ரஷ்யப் படைகள் முயற்சித்து வருகின் றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் உக்ரேனிய துருப்புக்கள் பின்வாங்க வேண் டியிருக்கும் என்று ஆளுநர் செர்ஹி கெய்டாய் கூறினார்.

சுற்றிவளைப்பில் சிக்கிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக துருப்புக்கள் புதிய நிலைகளுக்கு பின்வாங்குமாறு உக்ரேனிய தரப்பில் இருந்து எந்தநேரத்தி லும் கட்டளை இடப்படலாம் எனவும் அவது மேலும் தெரி வித்தார்.

இதேவேளை, தற்பாதுகாப் புக்காக உக்ரைன் சில தந்திரோ பாய மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும் என அந்நாட்டு ஆயுதப் படைகளின் தலைமை தளபதி வலேரி ஜலுஷ்னி ஒப் புக்கொண்டார். (ஐ)

# உக்ரைனின் தானியங்கள் ஏற்றுமதி; துருக்கியின் முயற்சிக்கு வரவேற்பு

வாஷிங்டன், ஜூன் 25

ரஷ்யாவின் போர் காரண மாக உக்ரைனில் முடக்கியுள்ள பல மில்லியன் தொன் தானியங் களை வெளியேற்றுவதற்கான ஒப்பந்தத்தில் துருக்கியின் தலையீட்டை வரவேற்பதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு பிரிவு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

உக்ரைன்மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் உக்ரைனுக் குள் முடங்கியுள்ள உணவு தானியங்களை வெளிநாடுக ளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற் சியில் நட்பு நாடுகள் மற்றும் பங்காளிகளுடன் இணைந்து அமெரிக்கா செயல்படுகிறது. ருங்கடலில் ரஷ்யாவின் முற்று கையால் தானியங்களை அனுப்ப முடியாமல் உக்ரைன் போராடி வருகிறது.

இந்நிலையில் இவற்றை வெளி யேற்றுவதில் துருக்கியின் மத்தி யஸ்த்தத்தை நாங்கள் நிச்சயமாக வரவேற்கிறோம் எனவும் அமெ ரிக்க தேசிய பாதுகாப்பு பிரிவு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டார்.

இதேவேளை, உக்ரேனிய துறைமுகங்களை ரஷ்யா முற்று கையிட்டுள்ளதால் நாட்டுக்குள் தேங்கியுள்ள சுமார் 20 மில்லி யன் தொன் தானியங்களை விடு விப்பதற்கான வழிகள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு அமைச்சர்கள் லக்சம்பேர்க்கில் கடந்த திங்கட்கிழமை நடை பெற்ற கூட்டத்தில் விவா தித்தனர்.

ரஷ்ய உணவு மற்றும் உர ஏற்றுமதியை எளிதாக்கும் அதேநேரம் உக்ரைனின் கடல் மார்க்கமான ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தை எட்ட ஐக்கிய நாடுகள் சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஐ. நாவின் இந்த முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியமும் ஆத ரவு தெரிவித்துள்ளது. எனினும் இந்த முயற்சிக்கு ரஷ்யா உடன் படுமா? என்பது தெரியவில்லை.

இதனிடையே உக்ரைன் மற் றும் ரஷ்யா இரு நாடுகளுட னும் நல்லுறவைக் கொண்டுள்ள துருக்கி, ரஷ்ய உணவு மற்றும் உர ஏற்றுமதியை எளிதாக்கும். இதேநேரம் உக்ரைனின் கடல் மார்க்கமான ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தை கண்காணிப்பாற் கான பொறிமுறையில் பங்கேற் கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# இங்கிலாந்துடனான டெஸ்ட் நியூசிலாந்து தடுமாற்றம்!




லீட்ஸ், ஜூன் 25

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணி முதல்நாள் ஆட்டம் முடிவில் 225 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில், மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் லீட்ஸில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ரொம் லதம், வில் யங் இணை தொடக்கம் கொடுத்தனர். முதல் ஓவரை வீசினார் இங்கிலாந்தின் பிரோட், அந்த ஓவரின் இறுதிப் பந்தில் ஓட்டம் எதனையும் எடுக்காமல் லதம் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த, அணித் தலைவர் கேன் வில்லியம்சன் நிதானம் காட்டினார். இருவரும் மெதுவாக ஆடினர். மெல்லமெல்ல நியூசிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது.

வில் யங் 20 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் லீச்சின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்தார் டெவன் கொன்வே, இருவரும் நிலைக்க முயன்ற போதும், வில்லியம்சன் 31 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் பிரோட்டின் பந்தில் வீழ்ந்தார்.

கொன்வேயுடன் சேர்ந்த ஹென்றி நிக்கோல்ஸும் அதிக நேரம் நிலைக்கவில்லை. கொன்வே 26, நிக்கோல்ஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்துக் களமிறங்கிய டரில் மிற்செல், ரொம் புளுாண்டெல் இணை நியூசிலாந்து அணிக்கு சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தியது.

இந்த இணை நிதானமாக ஆடியது. இதனால், முதல் நாள் ஆட்டம் முடிவில் - 90 ஓவர்கள் முடிவில் நியூசி லாந்து அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 225 ஓட்டங் களைப் பெற்றது.

மிற்செல் 78, புளுாண்டெல் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் பிரோட், லீச் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் ஜெமி ஓவர்ரோன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)




# இந்தியாவுடனான தொடர் அடில் ரஷித் விலகினார்!

லண்டன், ஜூன் 25

பிரபல இங்கிலாந்து வீரர் அடில் ரஷித், இந்தியாவுக்கு எதிரான வெள்ளைப் பந்துத் தொடர்களிலிருந்து விலகியுள்ளார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி ஒரு டெஸ்ட், 3 ஒருநாள், 3 இருபது -20 தொடர்களில் விளையாடுகிறது. டெஸ்ட், ஜூலை 1ஆம் திகதி தொடங்குகிறது. இந்தியாவுக்கு எதிரான ஒருநாள், இருபது - 20 தொடர்களில் சுழல்பந்து வீச்சாளர் அடில் ரஷித் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில் இந்தியாவுக்கு எதிரான வெள்ளைப் பந்துத் தொடர்களிலிருந்து அடில் ரஷித் விலகியுள்ளார். ஹஜ் பயணம் செய்வதற்கு அவர் விரும்பியுள்ளமையே இதற்கு காரணம். இதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை அனுமதியளித்துள்ளது.

அடில் ரஷித் விலகியுள்ளதால் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள், இருபது -20 தொடர்களில் 25 வயது லெக் ஸ்பின்னர் மட் பர்கின்சன் இடம்பெறக்கூடும். (ஐ)




# இந்திய அணியுடன் இணைந்தார் அஸ்வின்!

லண்டன், ஜூன் 25

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து, இந்திய அணியுடன் இணைந்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்து புறப்படுவதற்கு முன்பு, அஸ்வினுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

மும்பை வந்து ஜூன் 16ஆம் திகதி இந்திய கிரிக்கெட் அணியுடன் அவர் இணைய வேண்டியிருந்தது. ஆனால், தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதால், அவர் தனிமைப்படுத்தப்பட்டார். இந்திய அணியுடன் அவர் இங்கிலாந்துக்குப் புறப்படவில்லை.

இந்த நிலையில், கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த அவர் அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றி இந்திய அணியுடன் இணைந்துவிட்டார்.

இங்கிலாந்து, இந்தியா இடையே கடந்தாண்டு நடைபெற்ற டெஸ்ட் தொடரின் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆட்டம் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இந்தப் போட்டி வரும் ஜூலை 1ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடரில் இந்திய அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# இலங்கை மகளிரை வென்றது இந்தியா!

தம்புள்ளை, ஜூன் 25

இலங்கைக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியை இந்திய அணி 34 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

இலங்கை வந்துள்ள இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி, மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் பங்கேற்கிறது.

தம்புள்ளையில் நடந்த முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஸ்மிருதி மந்தனா (1), மேக்னா (0) ஏமாற்றினர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த மற்றொரு தொடக்க வீராங்கனையான ஷபாலி வர்மா (31) ஓரளவு கைகொடுத்தார்.

ஹர்மன்பிரீத் கவுர் (22), ரிச்சா கோஷ் (11), பூஜா (14) நிலைக்கவில்லை. கவிஷா தில்ஹாரி வீசிய கடைசி ஓவரில் தீப்தி சர்மா தொடர்ச்சியாக ஹட்ரிக் பௌண்ட்ரி அடித்தார். கடைசி பந்தில் ஜெமிமா ரொட்ரிக்ஸ் சிக்ஸர் விளாசினார்.

இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்தது. ஜெமிமா (36), தீப்தி (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் இனோகா 3 விக்கெட் வீழ்த்தினார்.

சவாலான இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு விஷ்மி கருணாரத்ன(1) ஏமாற்றினார். சமரி அத்தப்பத்து




(16), ஹர்ஷிதா மாதவி (10) சிக்கினர். நிலாஷி டி சில்வா (8), அமா காஞ்சனா (11) சோபிக்கவில்லை. கவிஷா ஆறுதல் தந்தார்.

இலங்கை அணி 20 ஓவரில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 104 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

கவிஷா (47), அனுஷ்கா சஞ்ஜீவனி (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியாவின் பந்துவீச்சில் ராதா யாதவ் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

ஆட்ட நாயகியதக ஜெமிமா தெரிவானார். (ஐ)

# 26 பேர் கொண்ட அணிக்கு அனுமதியளித்தது பிபா!




லண்டன், ஜூன் 25

இந்த ஆண்டு கட்டாரில் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் ஓர் அணியில் 26 பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று தாக்கத்தைத் தொடர்ந்து இந்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. முன்னர், ஓர் அணியில் 23 பேருக்கே இடமளிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், போட்டியில் மாற்று வீரர்களுடன் 15 வீரர்களின் பெயர் களை பதிவிட முடியும். தவிர, மருத்து வர் இதர அதிகாரிகளும் 26 பேர் பட்டியலில் அடங்குவர்.

உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் 32 நாடுக ளும் தங்கள் இறுதி அணியின் விவரங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு ஒக்ரோபர் 20ஆகு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)







தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றபோது, விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவி ஒருவருக்கு பரிசு வழங்கப்படுவதையும், நிகழ்வில் பங்கேற்றோரையும் படங்களில் காணலாம்.

# மடு தலம் வரும் பக்தர்களை பாதுகாக்க நடவடிக்கை தேவை

## மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி

**மன்னார், ஜூன் 25**

**வைத்தியசாலைகளில் தற்போது விலங்கு மற்றும் விசர் நாய் கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் மடு பெரு விழாவுக்கு வருவோரின் பாதுகாப்பு கருதி நாய்கள் அந்தப் பகுதிக்குள் உலாவுவதை தடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி. வினோதன் இவ்வாறு தெரிவித்தார்.**

எதிர்வரும் ஆடி மாத மடு பெருவிழா தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி. வினோதன் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஆடி மாத மடு அன்னை பெருவிழாவுக்கு இம்முறை கட்டுப்பாடு அற்ற முறையில் பக்தர்கள் வருகை தர இருக்கின்றார்கள்.

மடுப் பகுதி ஒரு கானகப் பகுதியாக இருப்பதால் மக்களும் இந்தப் பகுதிக்கு வருகை தரும்போது கட்டாக்காலி நாய்களும் காட்டுப் பகுதிகளுக்குள் இருந்து வருகை தரக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

ஆகவே தற்பொழுது வைத்தியசாலைகளில் விலங்கு மற்றும் விசர் நாய் கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் நாய் தொல்லைகளிலிருந்து இப்பகுதிக்கு வரும் மக்களை பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# கறுப்பு சந்தை வியாபாரிகளாலேயே இளைஞனின் உயிர் பறிக்கப்பட்டது!

## அங்கஜன் இராமநாதன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கறுப்பு சந்தை வியாபாரிகளாலும், அடாவடி கும்பல்களாலும் இன்று ஓர் இளைஞனின் உயிர் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடிகளும், மோதல் நிலைகளும் இடம்பெறுகின்றன என்று முறைப்பாடுகள் முன்வைக்கப்படும் சூழலில் இந்த மரணம் அதன் தீவிர நிலையை வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழக்கூடாது என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் மணிக்கூட்டு வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு, பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். செல்வரத்தினம் பிரசாந்த் என்பவரே இவ்வாறு மரணமானார். இது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன் உயிரிழந்தவர் தனது ஆதரவாளர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும், ஒத்துழைப்பு தர மறுத்து அடாவடியில் ஈடுபடும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்க அதிபர், பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ-3)

# உக்ரைன் - ரஷ்யா யுத்தத்துக்கு சர்வதேச நாணய நிதியம் காரணம்!

கொழும்பு, ஜூன் 25

உக்ரைன், ரஷ்ய யுத்தத்துக்கு சர்வதேச நாணய நிதியமே காரணம் என்று வாசுதேவ நாணயக்கார எம். பி. தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் அமெரிக்காவின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது. உக்ரைனில் அதன் தலையீடே ரஷ்யா அந்த நாட்டின்மீது படையெடுக்கக் காரணம் என்று தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் என்பது அமெரிக்காவின் வெளிவிவகார கொள்கையின் ஒரு பகுதியே என தெரிவித்துள்ள அவர் அதுவே உண்மை சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டினால் இன்று உக்ரைனில் யுத்தம் இடம்பெறுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நேட்டோவில் இணையும் படி உக்ரைனிற்கு யார் அழுத்தங்களை கொடுத்தது, சர்வதேச நாணய நிதியம்தான் இதன் காரணமாகவே அங்கு இன்று பேரழிவு யுத்தம் இடம்பெறுகின்றதுஎனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையால் மேலும் கடன்களை செலுத்த முடியாது தற்போதுள்ள கடன்களை மறுசீரமைப்பு செய்யுமாறு நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தை கேட்டுக்கொண்டுள்ளோம். சர்வதேச நாணய நிதியம் கடன் விவகாரத்தை பார்த்துக்கொள்ளும் அதேவேளை நாங்கள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெயை கொள்வனவு செய்யலாம் - என்றார்.

(ஐ)

# எரிபொருள் பதுக்கல் 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜூன் 25

சட்டவிரோதமான முறையில் எரிபொருளை சேமித்து வைத்திருந்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மாகும்புர, மாத்தறை மற்றும் பூகொடை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகும்புர பகுதியைச் சேர்ந்தவரிடமிருந்து 1,350 லீற்றர் டீசலை பொலிஸார் கைப்பற்றினர். இதேபோன்று, மாத்தறையில் கைது செய்யப்பட்ட நபரிடம் 800 லீற்றர் டீசல் பறிமுதல் செய்யப்பட்டது.

பூகொடை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 32 லீற்றர் மற்றும் தடைசெய்யப்பட்ட கத்தியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இந்த மூன்று நபர்களையும் அந்தந்தப் பிரதேச நீதிமன்றங் களில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனிடம் சி. ஐ. டியினர் 4 மணி நேரம் விசாரணை!

கொழும்பு, ஜூன் 25

“மைனா கோ கம”, “கோட்டா கோ கம“ மீதான அரசாங்க ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் சி.ஐ.டி.யினர் நேற்று 4 மணி நேரம் விசாரணைகளை நடத்தினர். குற்றப் புலனாய்வு பொலிஸ் அத்தியட்சர் ஜயதிலக தலைமை யிலான குழுவினரே அவரிடம் இவ்வாறுவிசாரணைகளை நடத்தினர்.

நேற்று முற்பகல் 9 மணிக்கு சி.ஐ.டி.க்கு சென்ற ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவிடம் நண்பகல் ஒரு மணி வரையிலும் விசாரணை நடத்தப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டது.

இதன்போது அலரி மாளிகையில் தான் ஆற்றிய உரையின் முழுமையான வடிவம் எனக் கூறி ஓர் இறுவெட்டையும் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ சி.ஐ.டி.யினரிடம் கையளித்தார் என்றும் அறிய வருகின்றது.

முன்னதாக கடந்த 21 ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றம், ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவுக்கு “மைனா கோ கம“, “கோட்டா கோ கம“ மீதான அரசாங்க ஆதரவாளர்களின் அத்துமீறிய தாக்குதல்கள் தொடர்பிலான விவகாரத்தில் பிணையளிக்கும்போது, அவரிடம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டி இருப்பதாக சி.ஐ.டி.யினர் தெரிவித்திருந்தனர்.

இதன்படியே அவரை நேற்று சி.ஐ.டி.யில் முன்னிலையாக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிக விலைக்கு அரிசி விற்ற 106 வர்த்தகர்கள் சிக்கினர்!

கொழும்பு, ஜூன் 25

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த 106 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரச் சபை தெரிவித்துள்ளது.

அரிசிக்காக உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டது முதல் அதிகூடிய விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களை தேடி நுகர்வோர் அதிகார சபை சுற்றிவளைப்புகளை முன்னெடுத்துள்ளது. அந்த சுற்றிவளைப்புக்க மைய கடந்த சில நாட்களில் 22 வழக்குகள் பதிவு செய்யப்பட் டுள்ளதாகவும், அதன்போது குற்றவாளிகளிடமிருந்து 3 மில் லியன் ரூபாவை அபராதமாக பெற்றுக்கொண்டதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

## மாணவிகள்...

வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு சம்பவத்தில் ஐந்து மாணவர்களுக்கு நீதிமன்றில் பிணை வழங்கப்பட்டுள்ளதோடு, மேலும் பலரை தேடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கின்ற ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இணைந்து பாடசாலை மாணவிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதோடு, பாலியல் சேட்டை புரிந்து துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக அவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக நியமிக்கப்பட்டு ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த நிலையில், குறித்த ஆசிரியர் மற்றும் மாணவர்கள் சிலர் இணைந்து மாணவிகள் பலரின் நிர்வாணப் புகைப்படங்களை வைத்து அச்சுறுத்தி அவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு ஆசிரியர் ஒருவரும் மாணவர்கள் சிலரும் செய்த சேட்டையை முல்லைத்தீவு இளைஞர்கள் சிலர் கண்டறிந்து, ஆசிரியர் மற்றும் மாணவர்களின் தொலைபேசியை எடுத்து பார்வையிட்டபோது பல மாணவிகளின் நிர்வாணமாக எடுத்துக்கொண்ட வீடியோக்கள், புகைப் படங்கள் குறித்த தொலைபேசியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த ஆசிரியர் மாணவர்களைப் பயன்படுத்தி மாணவிகளை காதல் வலையில் விழ்த்தி, அந்த மாணவிகளின் நிர்வாணப் புகைப்படங்களை பெற்று ஆசிரியரும் அந்த மாணவிகளை பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியரின் தொலைபேசியில் இருந்த ஆவணங்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதை தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலரை விசாரணைக்கு அழைத்து அவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது ஒரு மாணவியை ஆசிரியர் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் குறித்த ஆசிரியர் தலைமறைவாக இருந்த நிலையில் ஆசிரியரோடு சேர்ந்து இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுத்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாணவர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த ஆறு மாணவர்களையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதோடு ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் நேற்று சட்டத்தரணி ஊடாக நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

இதையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றத்தின் நீதிபதி ரி.சரவணராஜா குறித்த நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

## வடக்கு...

கருத்தில் கொள்ளாது வடக்கு மாகாணத்தில் வைத்தியர்களின் சம்பளத்தை குறைத்துள்ளதுடன் முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

சம்பளம் வழங்கப்பட முன்னரே உரிய அதிகாரிகளுடன் எழுத்து மூலமாக நாம் கோரிக்கை விடுத்தபோதும் உங்களது சம்பளம் குறைக்கப்படாது என்று அவர்களால் எமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

சம்பளம் வழங்கப்படாமல் விடுவது தொடர்பாகவோ சம்பளம் குறைப்பு தொடர்பாகவோ நிறுவனங்கள் முன்னரே அறிவிக்கவேண்டும் என்பது ஸ்தாபன விதி. ஆனால் எதுவும் பின்பற்றப்படாமல் இங்கு சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இவ்வாறான பிரச்னை ஏற்பட்டு சுகாதார அமைச்சர் மற்றும் பிரதமருடன் கலந்துரையாடிய போது அத்தியாவசிய தேவையான சுகாதாரத் துறைக்கு சம்பளங்கள் குறைக்கப்படாது என வாக்குறுதியளிக்கப்பட்டது.

எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கும் நிலையே காணப்படுகின்றது. அத்தியாவசிய சேவை என்ற அடிப்படையில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு முன்னுரிமை காணப்படவில்லை. ஊடகங்களை அவதானித்தால் எரிபொருள் நிலையங்கள் எங்குமே எமக்கு மதிப்பளிக்கபடாத விரட்டியடிக்கப்படுகின்ற நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான நெருக்கடிக்குள் நாம் எமது பணிகளை மேற்கொள்ளும்போது சம்பள குறைப்பு மேற்கொண்டு சம்பளத்தை வழங்காமல் விட்டால் நாம் என்ன செய்வது? எமக்குரிய சம்பளம் முழுமையாக வழங்கப்படாமல் விட்டால் நாடும் மக்களும் மிகவும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படுவர். நாடு சுடுகாடாகுவதையா இந்த அரசாங்கம் விரும்புகின்றது.

மிகவும் சிக்கலான காலத்தில் நாம் எதிர்கொண்டு சேவைகளைச் செய்யும் போது சம்பள குறைப்பு மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. ஆகவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனில் நாம் எமது தாய்ச் சங்கத்துடன் கலந்துரையாடி எதிர்வரும் காலத்தில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக உள்ளோம்-என்றார். (அ)

## முதலீட்டு...

பட்டியல் மூலம் அவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்தே அவர் நேற்று, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நேற்று பதவியேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐரோப்பிய...

கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தபோதே இதனை கூறியுள்ளனர்.

பொருளாதாரத்தைகட்டியெழுப்பும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக வழங்கப்படும் நிலையான செய்தியின் மூலம் சர்வதேச சமூகம், இலங்கைக்கு இலகுவாக உதவ முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

இலங்கை சனத்தொகையில் 90 வீதமானோர் கிராமங்களில் வசிப்பதுடன் அவர்களில் 75 வீதமானோர் கமத்தொழில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு தேவையான உரம், எரிபொருள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் பல பிரச்னைகளுக்கு மட்டுமல்ல, உணவு விநியோகம் சம்பந்மாகவும் தீர்வை காண முடியும் எனக் கூறியுள்ளார்.

கமத்தொழிலில் ஆர்வம் காட்டுவோருக்கு காணி பிரச்னைக்கு தீர்வாக பயிரிடப்படாத அரச காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் போருக்கு பின்னர் ஏற்பட்ட மனிதாபிமான நிலைமையை கவனத்தில் கொண்டு நீடித்த தீர்வை வழங்கவும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, எந்த சந்தர்ப்பத்திலும் அதில் தலையிடாது, பக்க சார்பின்றி நியாயமான முறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலீடு, சுற்றுலாத்துறை, கல்வி உட்பட பல துறைகள் சம்பந்தமாக இதன் போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சாய்பீ, பிரான்ஸ் தூதுவர் எரிக் லேவர்ட்,இத்தாலி தூதுவர் ரீட்டா மெனேல்லா, நோர்வே தூதுவர் ட்ரீனா ஜோரன்லி, நெதர்லாந்து தூதுவர் தான்ஜா ஹோரன்கிரிச், ஜேர்மனி தூதுவர் ஹொல்கர் லோத்தர் சோய்பர்ட்,ருமேனிய தூதுவர் கலாநிதி விக்டர் சியூடியா, துருக்கி தூதுவர் ரக்கிபே ஷெகர்ஜீஹோலு, சுவிஸர்லாந்து தூதுவர் டோமினிக் பேர்க்லர், ஜனாதிபதியின் ஊழியர் குழுவின் பிரதானி அனுர திஸாநாயக்க, அத்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# கறுப்பு சந்தையில் பெற்றோல் எம். பிக்களும் வாங்குகிறார்கள்!

கொழும்பு, ஜூன் 25

நாட்டின் சில பகுதிகளில், ஒரு லீற்றர் 1,000 ரூபாய் தொடக்கம் 1,200 ரூபாய் வரையான விலைகளில் சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் இரகசியமாக பெற்றோல் மற்றும் டீசலை விற்பனை செய்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அவசர பயணத்துக்கு எரிபொருள் இல்லாமையால் நேற்று கறுப்பு சந்தையில் பெற்றோலை ஒரு லீற்றர் 950 ரூபாய் வீதம் 5 லீற்றர் பெற்றோல் கொள்வனவு செய்ய நேரிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் தமது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் நிரப்பி பின்னர் குழாய்களை பயன்படுத்தி அவற்றை அகற்றி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்கின்றன என்று தெரிய வருகின்றதுஎரிபொருள் தட்டுப்பாட்டால், பய ணிக்க மிகவும் சிரமப்பட்ட போதிலும் கறுப்பு சந்தையில் எரிபொருளை கொள் வனவு செய்ய வேண்டியுள்ளதாக எரி பொருள் பாவனையாளர்கள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறான சட்டவிரோத எரிபொருள் நிரப்பு நிலையங்களை சுற்றிவளைப்பதாக அரசாங்கம் கூறினாலும் அது வெற்றிகரமாக இயங்குவதாக தெரியவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (சி)

# காங்கேசன்துறை படகு சேவை; பாதுகாப்பு அமைச்சு அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூன் 25

தமிழ்நாட்டின் பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற துறைமுகங்களுக்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையிலான சரக்கு படகு சேவை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். அத்துடன், கூடிய விரைவில் சரக்கு படகு சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த படகு சேவை மூலம் தேவையான மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களையும், உரம், பால்மா, மருந்து பொருட்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் தேவையானளவு எடுத்துவர முடியும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ரணிலின்...

பிரச்னைகளை மோசமாக்கியுள்ளது.

போராட்டக்காரர்கள் குற்றவாளிகள் அல்லர். ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்வதன் மூலம் பொதுமக்களின் கருத்தை அடக்க முடியாது.

கைது செய்யப்பட்டுள்ள அனைத்து ஆர்ப்பாட்டக்காரர்களும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## ரயிலில்...

நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்துக்கு பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் அவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (அ-03)

## கிளிநொச்சியில்...

நாளை ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட சில மணித்தியாலயங்களுக்கு மட்டும் இந்த விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கரடிப்போக்கு எரிபொருள் நிரப்பு நிலையம், பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையம் மற்றும் பளை நகரத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கப் பெறுகின்றது.

மாவட்ட அரசாங்க அதிபரால் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஆசிரியர்கள் சில மணித்தியாலயங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை பெற்றோலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளாருடன் உரையாடியுள்ளோம். அதற்கமைவாக நாளை ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னதாக மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கின்றபோது ஆசிரியர்கள் அதிபர்களுக்கு பெட்ரோல் விநியோகிப்படும்-என்றார். (அ)

## மனிதாபிமான...

வழக்கமான ஆய்வக பொருட்களும் கையிருப்பில் இல்லை.

மின்சார விநியோகத் தடை மற்றும் மின்பிறப்பாக்கிகளை இயக்க எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, பல மருத்துவமனைகள் அவசரமற்ற அறுவைச் சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகளை ஒத்தி வைக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் நிலவும் பொருளாதாரக் குழப்பம் முழு மனிதாபிமான அவசர நிலையாக மாறக்கூடும் என்று ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விடயங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

## நாட்டின்...

காணப்பட்டவுடன், பொருத்தமான 225 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படவேண்டுமெனவும், அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பொதுமக்களுக்கு உள்ளது எனவும் பிரதமர் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல்வாதிகளும், ஒட்டுமொத்த மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

## நிபந்தனை...

லான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.


சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு உதவ எதிர்பார்த்துள்ளதாக பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

ஒரு வார காலம் இலங்கையில் தங்கியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஊழியர்கள் மட்ட உடன்படிக்கையை எட்டுவது தொடர்பான கொள்கை அடிப்படையிலான விடயங்கள் குறித்து நீண்ட ஆய்வை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, பிரதமர், நிதியமைச்சர், மத்திய வங்கி உள்ளிட்ட பொருளாதார அதிகாரிகள் மற்றும் நிபுணர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் அவர்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# மைத்திரிக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு!



கொழும்பு, ஜூன் 25

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

றோயல் பார்க் கொலை சம்பவத்தின் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமை சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மை யில் வெளியிட்டிருந்த தகவலுக்கு எதிராக இந்த முறைப்பாட்டை செய்துள்ளதாக ரத்ன தேரர் கூறியுள்ளார்.

அண்மையில் சிங்கள தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப் பரப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, றோயல் பார்க் கொலைச் சம்பவத்தின் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்குமாறு, அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை விடுத்ததாக கூறியிருந்தார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்த பின்னர், வெளியில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள அத்துரலியே ரத்ன தேரர்,

ஜூட் மாந்த ஜயமஹா என்ற நபரை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலையை அடிப்படையாக கொண்டு இயங்கும் விசேட நிபுணர்கள் குழுவே உத்தரவிட்டது.

அந்த குழுவில் முன்னாள் நீதிபதிகள், சட்டத்தரணிகள், மனநல மருத்துவ நிபுணர்கள் உட்பட முக்கியமானவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்களே விடுதலை செய்யக்கூடிய நபர்கள் குறித்த விசாரணைகளை நடத்துவார்கள். அவர்களே விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்தனர்.

ஜெயமஹா என்ற நபருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைத்து, அதன் பின்னர் சில வருடங்கள் சென்ற பின்னர், அவரை மரண தண்டனையில் இருந்து விடுவிக்குமாறு விசேட நிபுணர்கள் குழு பரிந்துரைத்திருந்தது எனக் கூறியுள்ளார். (அ)

# வரிசையில் நின்றவர் விபத்தில் உயிரிழப்பு

அநுராதபுரம், ஜூன் 25

அநுராதபுரம் - பண்டுலுகம எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வரிசையில் காத்திருந்த இளைஞர் ஒருவர் நேற்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தார்.

கனரக வாகனம் ஒன்று மோதியதில் 19 வயதான இளைஞர் உயிரிழந்தார். அவர், தம்புத்தேகம பகுதியை சேர்ந்தவராவார்.

உயிரிழந்த இளைஞர் அநுராதபுரம் - புத்தளம் வீதியின் இடதுபுறத்தில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த இளைஞன் அதிகாலை விபத்தில் பலி!

கொழும்பு, ஜூன் 25

எரிபொருள் வரிசையில் காத் திருந்த இளைஞர் ஒருவர் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் பலியாகியுள்ளார்.

அநுராதபுரம், தம்புத்தேகம பகுதியைச் சேர்ந்த 19 வயது இளை ஞர் ஒருவரே இவ்வாறு பலியாகி யுள்ளார்.

அநுராதபுரம், பண்டுலுகம பகு தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காக குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு முதல் வரிசையில் காத்திருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை கனரக வாகனமொன்று மோதிய தில் அவர் உயிரிழந்தார்.எரிபொ ருள் மற்றும் எரிவாயு வரிசையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஐ கடந்துள்ளது. (அ)

# நாக விகாரையில் புத்தர் சிலை வைக்க எதிர்ப்பு என்பது பொய்!

## சரத் வீரசேகரவுக்கு சீ. வீ. கே. பதிலடி

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் நாக விகாரையில் புத்த பகவானின் சிலை வைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பாராளுமன்றில் தெரிவித்த கருத்து உண்மைக்கு புறம்பானது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

இது குறித்து அவர் நேற்று விடுத்த அறிக்கையில், கடந்த 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, "அண்மையில் யாழ்ப்பாணம் நாக விகாரையில் புத்த பெருமான் சிலையை நிறுவதற்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது." என்று கூறினாரென ஊடக செய்திகள் கூறுகின்றன.

யாழ்ப்பாண நகரத்தின் சிரேஷ்ட குடியிருப்பாளர் என்ற வகையில் மட்டுமன்றி இந்த நகரத்தின் நிர்வாகத்திலும் விவகாரங்களிலும் கடந்த 60 வருடங்களாக தொடர்புடையவன் என்ற வகையில் இந்தக் கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறேன். இப்படி எந்த நிகழ்வும் நாக விகாரையில் நடந்ததாக எவருக்கும் தெரியாது. இவரின் கூற்று பாராளுமன்றத்தையும் நாட்டு மக்களையும் தவறாக வழிநடத்தும் உண்மைக்கு புறம்பான ஒன்றாகும்.

இவரும் இவரைப் போன்றவர்களும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பல தசாப்தங்க ளாக நாக விகாரையுடனும் அதன் விகாராதியுடனும் மிகவும் மேம் பட்ட புரிந்துணர்வையும் அந்நியோன்யத்தையும் யாழ்ப்பாண மக்கள் பேணி வந்துள்ளனர். நாகவிகாரையின் உள்விவகாரங்க ளில் எவருமே தலையிட்டதும் கிடையாது. அப்படி இருக்கையில் நாக விகாரையில் புத்த பெருமா னின் சிலையை நிறுவதற்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள். அப்படியானவர் யாரும் இங்கு இல்லை.

மேலும், தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இந்தியாவின் தமிழ் நாட்டிலும் இலங்கையின் வட பகுதியிலும் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த வரலாறு பற்றி பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். இங்குள்ள பௌத்த எச்சங்கள் யாவும் தமிழ் பௌத்த எச்சங்களே தவிர சிங்கள - பௌத்த எச்சங்கள் அல்ல. தென்னிலங்கையின் பௌத்த மத உள்வருகையில் யாழ்ப்பாண தமிழ் மக்களின் பங்களிப்பு முக்கியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அவர்களின் ஆதரவு இல்லாமல் சங்கமித்தவும் அறஹத் மகிந்தவும் மாதகல் ஊடாக அநுராதபுரம் சென்று வெள்ளரசு மரத்தை நாட்டி புத்த சமயத்தை பரப்பியிருக்க முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மை. கால ஓட்டத்தில் சிதைவுற்ற பல சைவ ஆலயங்களின் எச்சங்களை பௌத்த மத எச் சங்கள் என்று புனைந்து பௌத்த விகாரைகளை அமைக்கவும், அந்தந்தப் பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்த சைவத் தமிழ் மக்களின் நிலங்களை மதத்தின் பெயரால் அபகரிப்பதும் அடாத்தான செயல்கள். இவற்றை தமிழ் மக்கள் எதிர்த்து குரல் எழுப்பி போராடியே தீருவர் - இவற்றை அச்சுறுத்தல்கள் மூலம் அடக்கி விடலாம் என்பது பகல் கனவு.

தமிழர்கள் கடந்த எழுபது வருட காலத்தில் கே. எம். பி. ராஜரட்ண, தேமிஸ், என். கியூ. டயஸ், ஜெயசூரிய, சிறில் மத்திய போன்ற பல இனவாதிகளைக் கண்டவர்கள். - இப்பொழுதும் சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்ற சிங்கள - பௌத்த பேரினவாதிகளையும் அதே நிலைப்பாட்டிலேயே உள்ள ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவையும் காண்பவர்கள்.

இவர்களுக்கு எவ்வாறு அவர்களது சிங்கள - பௌத்த அடையாளம் உணர்வுபூர்வமானதோ, அதேபோல் தமிழ் இந்துக்களுக்கு அவர்களின் அடையாளம் உணர்வுபூர்வமானது. இனத்துவ மற்றும் சமய அடையாளங்களைப் பேணிக் காக்கவே நாம் போராடுகின்றோம் என்பதை சிங்கள பேரினவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். எமது போராட்டம் சிங்கள மக்களுக்கோ புத்த மதத்திற்கோ எதிரானது அல்ல - என்றுள்ளது. (ஐ)

# எரிபொருள் அனைவருக்கும் கிடைக்க பொறிமுறை தேவை!

## யாழ் மாநகர சபை பிரதி முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

இலங்கையில் எரிபொருள் நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் அரச ஊழியர்களிடம் நெகிழ்வுத் தன்மையுடன் செயல்படவேண்டும் என்று யாழ் மாநகர சபை பிரதி முதல்வர் துரைராஜா ஈசன் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் தற்போது பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, வடக்கு - கிழக்கில் மக்கள் அதிகளவான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். எரிபொருள் விநியோகம் சரியான பொறிமுறையில் பின்பற்றாததால் பொதுமக்களும் அரசு ஊழியர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்போதுதான் பிரச்னைக்கு தீர்வு காண முடியும். எனவே, திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் அரச ஊழியர்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த பொருளாதார நெருக்கடி - எரி பொருள் நெருக்கடியில் நெகிழ்வுத் தன்மையை பின்பற்றி செயல்பட வேண்டும்.

பொருளாதாரம் சம்பந்தமாக தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதற்காக வீதியில் அதிக நேரத்தை செலவு செய்வதோடு கடமைகளுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் தவிக்கின்றனர். எனவே அரசு ஊழியர்கள் தங்களுடைய உரிய கடமை நேரத்துக்கு சமாளிக்க முடியாமல் அவதிப்படுகின்றனர். தற்போது அரசு ஊழியர்கள் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர். பொருட்களின் விலைகள் அதிகரிப்பு பொருட்களுக்கு தட்டுப்பாடு இந்நிலையில் பணிக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அரச உயர் அதிகாரிகளுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளன. ஆகவே, அரச திணைக்களங்களின அதிகாரிகளும் அரச ஊழியர்களின் நிலையை நன்கு உணர்ந்து செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# டலஸ் அழகப்பெரும தலைமையில் கூட்டணிக்கான ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, ஜூன். 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

மொட்டு கட்சி மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ள நிலையில், மாற்று ஏற்பாடாகவும், அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும் வகையிலுமே இக்கூட்டணி உருவாக்கப்படவுள்ளது.

புதிய கூட்டணியில் இணைவதற்கு முக்கிய பல பிரமுகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கூட்டணியின் சின்னம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை, அதன் நிறம் மஞ்சள் நிறமாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் கட்டமைப்பில் உருவான மிகப் பெரிய கூட்டணியாக இது அமையும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

டிலான் பெரேரா, நாலக கொடஹேவ உட்பட மொட்டு கட்சி எம்.பிக்கள் 20 பேர்வரை டலஸ் பக்கம் நிற்கின்றனர், சுயாதீன அணிகளும் இந்த கூட்டணியை வரவேற்றுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE- கஜினி
04.30 மணி : மனிதனின் மறுபக்கம்-மகாகவமு சுப்ரமணிய பாரதியார்



05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-யாழ் பலாலி சர்வதேச விமானநிலையம் மீள திறப்பது




07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
07.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: டான் பட்டிமன்றம்




10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு